www.padippakam.com

# முன்றில்



நகுலன்
தமிழவன்
எஸ். ராமகிருஷ்ணன்
கலாப்பிரியா
ஞானக்கூத்தன்
எம்.எஸ். இராமசாமி
பாரதிராமன்
முன்றில் செய்திகள்

இதழ் – 19 ஜனவரி – 1996

பத்து ரூபாய்

படிப்பகம்

www.padippakam.com



# வல்லிக்கண்ணன்

திரு. வல்லிக்கண்ணனின் பவள விழா நடந்ததில் பெரு மகிழ்ச்சி உண்டு. நரிகளும் ஓநாய்களும் நடமாடி வைதிக பாசிசத்தை வளர்த்து வரும் இங்கே ஒரு இலக்கியச் சிங்கமாக இருப்பதில் பெருமைதான். கிழட்டுச் சிங்கமானாலும், சிங்கம்தான்.

* * *

ஆண்டு சந்தா : ஐம்பது ரூபாய்

ஆசிரியர் – வெளியிடுபவர் : மா. அரங்கநாதன்

முகவரி : 25, பாரதியார் முதல் தெரு,
பழவந்தாங்கல், சென்னை – 600 114.

கணிப்பொறி அச்சு கோப்பு : எல்.கே.எம். கம்ப்யூட்டர் பிரிண்ட்ஸ்,
சென்னை – 17.

படிப்பகம்

www.padippakam.com

# பலி நாடகம்

**தமிழவன்**

தனது ஒரு கையில் சிகரெட் வைத்திருந்த ராஜா, தாடியை மறு கையால் தடவிக்கொண்டான். அடுத்த நாள் ஏழாவது மாடியில் இருக்கும் அவனது அலுவலகத்தின் அறையில் போய் அமர்வதுவரை அப்படியே செய்வான் போலிருந்தது.

'கையை எடு' என்று முத்தண்ணா ராஜாவின் கையைத் தட்டிவிட்டான். அப்படித் தட்டிவிட்டபோது முத்தண்ணா எப்போதும் மாட்டியிருக்கும் அவனது கண்ணாடி அந்த நீண்ட ஹாலின் கதவருகில் போய் விழுந்தது.

ஹாலின் தரையில் அழகான பீங்கான் தரையோடுகள் நடுவில் ஒரு பூங்கொத்துப் படமுமாய் வேயப்பட்டிருந்தன.

ராஜா முத்தண்ணாவைப் பார்த்துச் சிரித்தான். உடனே சுகிர்தராஜாவும் சிரித்தான். முத்தண்ணா கையை முரட்டுத் தனமாக முட்டில் இடித்து அழகு காட்டிக்கொண்டே மூலையை நோக்கிக் கண்ணாடியை எடுக்க ஓடினான்.

பின்பு நாற்காலியிலும் மேசையிலுமாகக் கூடியிருந்த அவன் நண்பர்களுக்கருகில் வந்தான். இப்போது முத்தண்ணா பேசினான். நண்பர்கள் தங்கள் கன்னங்களில் கை வைத்தபடி முத்தண்ணா பேசுவதைக் கவனமாகக் கேட்டார்கள்.

"நாம் இங்கு இன்று கூடியிருப்பதன் நோக்கம் உங்களுக் கெல்லாம் தெரியும்".

"சரி, பீடிகை போதும். விஷயத்துக்கு ஜல்தியா வா" என்றான் சுகிர் என்றழைக்கப்படும் சுகிர்தராஜா.

"முத்தண்ணா பிளீஸ், ஜல்தியா வா, இல்லாவிட்டால் நம் சுகிர்தராஜா 'தம்' அடிக்க எழுந்துவிடுவான்".

ஹாலின் கதவருகில் சுகிர்தராஜாவைப் பற்றிக் கேலி செய்து கொண்டு வருவது யார் என்று பார்த்தபோது அங்கே கையை



படிப்பகம்

www.padippakam.com

ஆட்டிக்கொண்டு ராம்காந்தி வந்து கொண்டிருந்தான். ராம் காந்திக்கும் நம் தேசப்பிதா காந்தி போல் கை சற்று நீளம்.

சுகிர்தராஜா, நான்குபேர் ஒரு விஷயத்தை அமர்ந்து பேசும்போது அவர்களைப் போல் அமர்ந்துகொள்ள இயலாதவன். திடீரென்று எழுந்து 'தம்' அடிக்காவிட்டால் அவன் மிகவும் கஷ்டப்பட்டு விடுவான். அதைத்தான் மகாத்மா காந்தியைப்போல் கைநீளம் படைத்த ராம்காந்தி சுட்டிக்காட்டிக் கிண்டல் செய்தான். அடிக்கச் செல்வதுபோல் ராம்காந்தியின் அருகில் சுகிர்தராஜா போனான். ராம்காந்தி கலங்கிப்போனான். கண்களில் மிரட்சி தோன்ற சுகிர்தராஜா வரும் வேகத்தைப் பார்த்தான். ராம்காந்தியின் பயபீதியை க்ஷண நேரத்தில் கண்ணுற்ற பிற நண்பர்கள்கூட கலங்கினார்கள். எல்லோரும் தங்களின் பேச்சு, கிண்டல், கேலியைத் தங்களை அறியாமலேயே நிறுத்திவிட்டு ராம்காந்தியின் முகத்தின் பயபீதி தம்மிடமும் தொற்றிக்கொள்ள அப்படியே நின்றார்கள்.

ஓடிச்சென்ற சுகிர்தராஜா திடீரென்று ராம்காந்தியைத் தாக்குவதுபோல் பாய்ந்து அவனை அப்படியே கட்டிப்பிடித்து 'ஓஹோ ஓஹோ' என்று கடகட என்று சிரித்தான். ராம்காந்தி முகத்திலிருந்து உணர்ச்சி மாற சில நிமிடங்கள் பிடித்தன. அழுகையும் அவமானமும் துரத்த, சுகிர்தராஜாவைக் காலால் எட்டி உதைத்தான். செம்மையான உதை. நன்கு வலித்திருக்க வேண்டும். ஆனாலும் சுகிர்தராஜா சிரித்துக் கொண்டே யிருந்தான். அது அவனது இயல்பு.

சற்றுநேரத்தில் நண்பர்கள் பழையபடி சகஜமானார்கள். ஒருவனை இன்னொருவன் கிச்சுமுச்சுக் காட்டினான். வேறு ஒருவன் நண்பனின் முதுகில் போகும் எறும்பைத் தட்டிவிட்டான்.

முத்தண்ணா தனது பாண்ட்டிலிருந்து சிகரெட்டை எடுத்து, கேட்ட நண்பர்களுக்கெல்லாம் கொடுத்தான்.

"சொல், ஏதோ ஆரம்பித்தாயே".

"என்னது?" என ராஜாவைக் கேட்டான் முத்தண்ணா. முத்தண்ணா தான் பேசுவதை அடிக்கடி மறக்கும் சுபாவம் இல்லாதவனாக இருந்தாலும் இப்போது வல்லிசாக மறந்திருந்தான். ராஜா அதை உணர்ந்து ஞாபகமூட்டினான்.



படிப்பகம்

"நாம் இங்குக் கூடியிருப்பதன் நோக்கம் என்று ஏதோ சொல்லத் தொடங்கினாயே".

"ஓ... மறந்தே போய்விட்டேன், பார்..." என்று தலையைச் சொறிந்தான் முத்தண்ணா. அவன் தலையை நண்பர்களும் சேர்ந்து சொறிந்தார்கள். 'போங்கடா போங்கடா' என்று ஒவ்வொருவனாக விரட்டினான். ராஜாவை விரட்டும்போது சுகிர்தராஜா வந்து தலையைச் சொறிவான். சுகிர்தராஜாவை விரட்டும்போது ராஜாவோ, ராம்காந்தியோ வந்து தலையைச் சொறிவார்கள். முத்தண்ணாவுக்கு ரொம்பவும் ரோதனையாகப் போயிற்று. என்ன செய்வது என்று சுற்றும் முற்றும் பார்த்தான். அவனுக்குக் கோபம் வந்தது.

இந்த விளையாட்டுப் போதும் என்றான் சர்வ சாவதானமாக. பின்பு மீசையை ஒரு பக்கமாகத் தடவினான். அது அவன் வழக்கமாகச் செய்யும் காரியம்.

நண்பர்களுக்கும் போதும் என்றும் ஒரே நேரத்தில் மனதில் உறைத்தது. அதன்பிறகு அவர்கள் முத்தண்ணாவின் தலையைச் சொறியவில்லை என்பது மட்டுமல்ல, அவன் தலையிருந்த பக்கம் பார்க்கக்கூட இல்லை.

மீண்டும் ஞாபகப்படுத்தும் வேலை தன்னைச் சார்ந்தது என்பதுபோல ராஜா தான் ஞாயகப்படுத்தினான்.

"நாம் இங்குக் கூடியிருப்பதன் நோக்கம் பற்றிச் சொல்ல வந்தாய் முத்தண்ணா".

"நீ சிகரெட் பிடிப்பது அசிங்கமாக இருக்கிறது. எனக்கு ஏதோ 'செக்ஸ் ஆக்ட்' தான் ஞாபகம் வருகிறது" என்றான் முத்தண்ணா.

சுகிர்தராஜா லேசாகச் சிரித்தான். ராம்காந்தி எல்லோரும் சுற்றி அமர்ந்திருந்த மேசையின்மீது விரல்களால் தட்டினான். இப்போது ராஜா எங்கோ தூரத்தில் பார்த்து விசிலடித்தான். விளக்குகளின் ஸ்விட்சை அழுத்திவிட்டு வந்தான் சுகிர்தராஜா. அவர்கள் இருந்த கட்டிடத்தில் லேசாய் இருள் சூழ ஆரம்பித்தது.

"தடியன், ஸ்விட்சைக் கூட மெதுவாகப் போடத் தெரியலை பார்" என்றான் ராம்காந்தி. சுகிர்தராஜா 'ஸ்ஸ்' என்று

உதடுகளைக் குவித்து ஒலி எழுப்பினான். கடைக்கண்ணால் ராம்காந்தியைப் பார்த்தான்.

முத்தண்ணா கனைத்தான். அதற்கு அர்த்தம், அவர்கள் அங்குக் கூடியதன் நோக்கத்தை முத்தண்ணா சொல்லப் போகிறான் என்பது.

ராஜா தன் தலையை அந்தப் பெரிய அறையின் கதவு இருக்கும் வடக்குப் பக்கம் பார்க்கும்பொருட்டு, தான் அமர்ந்திருக்கும் கோணத்திலிருந்து உடலை வலதுபுறமாகத் திருப்பியபடி அமர்ந்திருந்தான். அவனது சட்டை அவனது மார்பை இறுக்கியபடி இருந்தது. பட்டன்கள் ஒவ்வொன்றாகப் ‘படார்’ என்று உடைந்து தெறிக்கலாம் என்பது போலிருந்தது தோற்றம்.

முத்தண்ணா, ‘சுகிர்’ என்று சுகிர்தராஜாவை அழைத்து விட்டுப் பெருமூச்சு விட்டான். அதற்கிடையில் ராஜாவின் காலை ராம்காந்தி சிகரெட்டால் சுட்டுவிட்டான் என்று ராம்காந்தியை ஹாலின் கோணங்களில் எல்லாம் விரட்டினான் ராஜா. ராம்காந்தி போனவாரம்தான் ரோடு விபத்து ஒன்றில் கால் எலும்பை ஒடித்து ஹாஸ்பிட்டலில் இருந்து திரும்பியிருந்தான். எனவே சிலவேளை நொண்டியபடியே ஓடினான்.

அப்போது தெற்குப் பக்கத்தில் திறந்து கிடந்த கதவு வழியாக விளக்கொளி பரவாத ஒரு பகுதியில் திடீரெனத் தோன்றி மேசை ஓரத்தில் தனக்கு ஒதுக்கப்பட்ட நாற்காலியில் ஓசைபடாதவாறு அமர்ந்து கொண்டாள் பத்தொன்பது வயது நடிகையான காமுகி என்பவள். கருமையான ‘டி’ ஷர்ட்டும் ஒரு ‘பாண்டும்’ அன்று அவளது ஆடை.

“வெல்கம் காமுகி” என்று அந்த மேசையின் நடுநாயகமாக வீற்றிருந்த முத்தண்ணா சொன்னான். குரலில் சுரத்தில்லாமல் இருந்தது. அப்போது ராம்காந்தி ஹாலில் தூரத்தில் ஒரு மூலையில் ராஜாவுக்குப் பிடிகொடுக்காமல் ஆட்டம் காட்டிக் கொண்டிருந்தான்.

சுகிர்தராஜா, “டேய் வாங்கப்பா, முத்தண்ணா பேசப்போகிறான்” என்று கூறிவிட்டுக் காமுகியைப் பார்த்தான், காமுகி அழுதுகொண்டிருந்தாள்.

சுகிர்தராஜா ஏதும் சொல்லவில்லை. மௌனமாக அவளைப் பார்த்தான். காமுகியிடம் முத்தண்ணா, "அழுது எல்லாவற்றையும் குட்டிச் சுவராக்கிவிடாதே" என்று மட்டும் கூறினான். ராஜாவின் பிடிக்குள் அகப்பட்டுவிடுவான் என்பதுபோல் ராம்காந்தி காணப்பட்டான். ஆனால் ராஜா அதற்குள் ஹாலில் சுருட்டி வீசப்பட்டிருந்த கயிறுகளுக்குள் கால் சிக்க தடாலென வீழ்ந்தான். ஆகையால் ராம்காந்தி தப்பி ஓடிவிட்டான். ராம்காந்தி அந்த ஊரின் அலுவலகம் ஒன்றில் பத்து மணி முதல் 1 மணிவரை வேலை செய்யும் ஒரு பகுதி நேர ஊழியன். ஒருமணி அடித்துவிட்டால் 'டாண்' என்று தன் இருக்கையிலிருந்து எழுந்து டௌன் பஸ்ஸில் ஏறினான் என்றால் நேராக ஹாலில் நண்பர்களைச் சந்திக்க வந்துவிடுவான். இடையில் ஐயர் கடையில் ஒரு டிகாக்ஷன் காபி குடித்துவிட்டால் மிகுந்த புத்துணர்ச்சி அவனுக்கு வந்துவிடும். வாழ்க்கையில் புதிய அர்த்தம் அந்நேரம் அவன் காண்பான். அதன்பிறகு யாரேனும் அங்கிருந்தால் அவர்களுடன் சேர்ந்து டேபிள்டென்னிஸ் விளையாடுவான். சிலவேளை டேபிள்டென்னிஸ் விளையாடு பவர்கள் வந்திருக்க மாட்டார்கள். அப்போதெல்லாம் தூரத்தில் வெறித்துப் பார்த்துக்கொண்டே நிற்பான் ராம்காந்தி. தூரத்தில் வானத்தில் மேகக்கூட்டங்கள் தோன்றுவதும் மறைவதும் அவனது கவனத்தைக் கவர்ந்துவிடும்.

சுகிர்தராஜா மேசைமுன் நடுநாயகமாய் வீற்றிருந்த முத்தண்ணாவைப் பார்த்தான். முத்தண்ணா மீண்டும் கனைத்தான். அதாவது முத்தண்ணா பேசப்போகிறான் என்று அர்த்தம்.

முத்தண்ணா பேசினான். அந்த ஊரில் சமீபகாலமாகத் தோன்றியுள்ள புகழ்பெற்ற பேச்சாளர்களை ஓரளவு இமிட்டேட் செய்தானோ என்றிருந்தது பேச்சு.

"நாம் நாடக ஒத்திகைக்காக இங்கு வந்திருக்கிறோம். தமிழில் நாடகக்கலை வளரவில்லை என்று பலகாலமாக ஒரு கெட்ட பெயர் இருக்கிறது. எனவே நமது நாடகத்தின் மூலம் அந்தக் கெட்ட பெயர் நீங்கிவிடும் என்று நினைக்கிறேன்".

முத்தண்ணா இலக்கணச் சுத்தமாகப் பேசினான். தன் இருப்பிடத்தில் அமர்ந்திருந்த ராஜா சட்டைப் பாக்கெட்டில் கை

www.padippakam.com

போட்டான். ராம்காந்தி தலை ஆட்டி முத்தண்ணாவை ஆமோதித்தான். அவன் முகம் லைட் இருந்ததற்கு எதிர்ப்பக்கமாக இருந்ததால் இருளாகத் தென்பட்டது.

சுகிர்தராஜா நாடோடி. ஒரு ஊர் என்று இருக்க மாட்டான். அதனாலோ என்னவோ நாலுபேர் இருந்து பேசுமிடத்தில் அவன் பிருஷ்டம் நிலைகொள்ளாது தவிக்கும். அந்தப் பிருஷ்டத் தவிப்பை அவன் ஆன்மாவின் அடங்காத தவிப்பாகக் கருதி உடனே எழுந்து காலாற நடந்துவிட்டு நண்பர்கள் அவர்கள் பேசிக்கொண்டிருந்த விஷயத்தைப் பேசி முடிக்கும்போது வந்தாலும் வருவான். அல்லது கண்ணில் டௌன் பஸ் தென்பட்டால் சுகிர்தராஜா அப்படியே போய்விட்டாலும் ஆச்சர்யமில்லை. இப்படிப்பட்ட சுகிர்தராஜா முத்தண்ணா நாடகம் பற்றிப் பேசும்போது அப்படியே அமர்ந்திருந்தான். அசையவே இல்லை.

ராம்காந்திதான் நாடகத்திற்குப் பலிபீடம் வேண்டுமே என்று முதன் முதலில் ஞாபகப்படுத்தியவன். நாடகம் பற்றிப் பலகாலத்திற்கு முந்தி அவர்கள் பேசியபடிதான் நாடக ஒத்திகைக்கு வந்தார்கள்.

ஆனாலும் மற்றவர்களுக்கு மறந்துபோன பலிபீடம் வேண்டும் என்ற விஷயம் அவனுக்கு மட்டுமே ஞாபகம் இருந்தது என்பது குறிப்பிடத்தக்க ஒரு விஷயம்தான்.

“இன்று ஒத்திகையா? நிஜநாடகமே இன்று என்றல்லவா நான் கறுப்பு ஆடை போட்டுக்கொண்டு வந்தேன்?” என்று காமுகி சொன்னபோது எல்லோரும் அவளை அதுவரை மறந்திருந்தது போலவும் இப்போது திடீரென இவள் எங்கிருந்து தோன்றினாள் என்பதுபோலவும் அவர்கள் பார்த்ததைப் பொருட்படுத்தாது அவள் கழுத்தை முடிந்த மட்டும் பின்பக்கமாய் தள்ளி ஹாலின் கூரையைப் பார்த்தாள். மார்பகங்கள் முன் பக்கம் நோக்கிச் சாய முடிந்த மட்டும் பின்பக்கமாய் பார்வையைச் செலுத்தித் தலையை மேல்நோக்கிப் பார்த்தாள். அப்படிச் செய்தது அவள் ஒரு நடிகைக்குரிய உடற்பயிற்சிகளைச் செய்து வருபவள் என்று காட்டியது.

முத்தண்ணா அவள் தலையை எப்படிப் பின்பக்கம் தள்ளி மேல்நோக்கிப் பார்க்க வேண்டும் என்று பயிற்சி தந்தான்.



படிப்பகம்

ராம்காந்தி ஹாலின் அறை போன்ற மூலையிலிருந்து ஒரு பழைய கிரீடத்தைக் கொண்டு வந்தான். வெளியில் இருள் இன்னும் கூடியது.

அப்போது ஹாலில் இருந்த அவர்கள் கூட்டத்தைச் சாராத ஒருசிலர் போய்விட்டிருந்தார்கள். ஓரிரு விளக்குகள் தவிர பிற அணைக்கப்பட்டிருந்தன. கதவுகளை எல்லாம் காமுகியும் பிறரும் சேர்ந்து அடைத்தார்கள். முத்தண்ணா இப்போது தலை தாழ்த்தியபடி அமர்ந்திருந்தான்.

பின்பு பலிபீடம் அலங்கரிக்கப்பட்டது. ஹால்நடுவில் பலிபீடம் வைக்கப்பட்டபின் "நாடகம் தொடங்கலாமே" என்றனர்.

அதற்குமுன் எல்லோரும் சேர்ந்து பேசியதில் நாடகத்தில் வரும் கற்பழிப்பு இறுதியில் வரும் முக்கிய காட்சி என்பதை ஞாபகத்தில் கொண்டார்கள்.

பல விஷயங்களில் ஒத்த கருத்து ஆரம்பத்தில் ஏற்படவில்லை என்றாலும் போகப்போக எல்லோரும் ஒருமித்த கருத்துடையவர்களாய் ஆகிப்போனார்கள். நிறைய விவாதிக்கப் பட்ட மூன்று நான்கு விஷயங்களில் ஒன்று ஒத்திகை எது, நிஜ நாடகம் எது என்பதும் கூடத்தான்.

எப்படியோ அதிக சண்டையோ சச்சரவோ இல்லாமல் இறுதிக் காட்சியும் ஆரம்பித்துவிட்டது.

காமுகியைப் பலிபீடத்தில் அமரவைத்துப் பின்பக்கமாய் சாய்த்தனர். ராம்காந்தி முதலில் அவளது கைகளையும் கால்களையும் பலிபீடத்தின் கால்களோடு கயிறுகளால் கட்டினான். தனது கைக்கடிகாரத்தைக் கழற்றி ஓரத்தில் வைத்துவிட்டு அவளது கறுப்பு ஆடையை அப்புறப்படுத்திவிட்டு அவளது மார்பகங்களைக் கைகளாலும் பற்களாலும் மிகவும் கொடூரமாகப் பற்றினான். தன் விரல்களாலும் உடலின் வெறியாலும் அவள் உடலில் மேல் பாய்ந்து பரவினான். அவள் அதரத்தைத் தன் அதரத்தால் ஒன்றுமில்லாமல் துடைத்தெறிவது போல் குதறினான். அவசரத்தில் கால்களில் தொங்கியபடி இருந்த அவளது பாண்ட் கிழித்தெறியப்பட்டது. உள்ளாடை முடியோடு தூர போய் விழுந்தது. தன் வெறியைத் தீர்த்துவிட்டு எழுந்தான். தனது கைக்கடியாரத்தை இருந்த இடத்திற்குச் சென்று அதனை

எடுத்துக் கைகளில் கட்டினான். அப்போது அவள்மீது ராம்காந்தி படுத்துக்கிடந்தான் நீளமான தனது மகாத்மா காந்தியின் கைகளுடன். இப்படியே சுகிர்தராஜாவும் வந்து தனது உடல் இச்சையை ஒரு வெறிநாயின் மூர்க்கத்தோடு தணித்தான். எழுந்து எழுந்து மீண்டும் பாய்ந்தான். அவளோ பற்களைப் பேய்போல் கடித்துப் பெரும் ஒலி எழுப்பினாள். சந்தோஷச் சிரிப்போ, கொடூரக் காளியின் வெளிப்படலா என்று கூறமுடியாதிருந்தது.

கடைசியாக முத்தண்ணாவின் முறை வந்தது. முத்தண்ணா பழைய பொருட்கள் அடைத்திருந்த ஹாலின் அறையிலிருந்து வெளிப்பட்டபோது கம்பீரமான தோற்றம் தந்தான். வேஷம் கச்சிதமாக இருந்தது. அவன் ஒரு நிஜமான நீதிபதியின் தோற்றத்தில் இருந்தான். வழக்கமாக அவன் அணியும் கண்ணாடி இல்லை. அதே தோற்றத்தோடு அவளது உடலின் ஒவ்வொரு பாகத்தையும் தனது பசிக்கு ஏற்ற இரையாக மாற்றினான். அவளது உடலில் இரத்தக் காயங்களும் நகக்காயங்களும் கூடிக்கொண்டே போயின. பின் பசி அவனுக்கு அடங்கியது என்று தோன்றியபோது முத்தண்ணா எழுந்தான். கட்டுகள் நெகிழ அம்மணமாய் முனகியபடி புட்டம் மேல்நோக்கக் கவிழ்ந்து கிடக்கும் அவளின் உடலை அவன் பார்க்கவில்லை.

ஒரு அலுவலகத்தில் வேலை செய்பவன் ராஜா. பகுதி நேர ஊழியன் ராம்காந்தி. ஓரிடத்தில் அமராத ஊர்சுற்றி சுகிர்தராஜா.

ராஜா, ராம்காந்தி, சுகிர் போல் முத்தண்ணாவைப் பற்றியும் சொல்ல வேண்டும். ஆனால் முத்தண்ணா பற்றி அதிகம் ஆரம்பத்திலிருந்தே யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. ஒன்று மட்டும் அவனைப்பற்றி நிச்சயமாகக் கூற முடியும்.

முத்தண்ணா என்ற பெயர் பிரபல ஆசிரியர் ஒருவரின் மொழிபெயர்ப்பு நாவலில் வரும் முக்கியமான பாத்திரம். எல்லோரையும் ஆட்டிப் படைப்பவன். விநோதம் என்ன வென்றால் மூலநூலில் அந்தப்பெயரில் ஒரு பாத்திரம் இல்லை.

www.padippakam.com

# ரகஸிய ஆண்கள்

**எஸ். ராமகிருஷ்ணன்**

வெயிலின் அலைகளை உறிஞ்சியபடியே வெட்ட வெளியில் மேய்ந்து கொண்டிருந்த நாற்பது ஆடுகள் மெல்ல தன் நிறம்மாறி செந்நிறம் கொண்டதையும் அவை வெக்கைதிரட்சி தாங்காது பூமியை முட்டிப் பிளந்து தலை மண்ணில் புதைய வானை நோக்கி உயர்த்திய பின் கால்களுடன் குடூர மரணம் கொண்டதையும் தன் கனவில் ஏழுமுறை கண்ட தாசி வனமாலை இதன் பலனை அறிந்துகொள்ள தெற்கே ஆள் அனுப்பி தாதங்குளம் சுப்பையாபிள்ளையை கூட்டி வரச்சொன்னாள். நெடுங்காலமாகவே மணல்கோட்டை கிராமத்தில் தங்கிவிட்ட இரண்டு பிச்சைக்காரர்கள் தாதங்குளத்திற்கு வனமாலையின் பொருட்டு சென்றனர். அப்போது தாது வருசம் நடந்து கொண்டிருந்தது.

நாற்பது வயதைக் கடந்துபோன வனமாலையை தேடி ஆண்கள் எவரும் வருவது நின்று போனது. அவளும் உடல் பருத்து சுரக்குடுவை போலாகி வெடித்த உதடுகளும் தலைமயிர் கொட்டிப்போன தலையும், செம்பட்டை புருவமுமாகயிருந்தாள். ஆண்கள் வராத பத்து வருடங்களாக அவள் வீட்டு முன் கதவு பூட்டப்பட்டு கிடக்கின்றது. முன் வந்துபோன ஆண்களின் வசீகரமும் ஸ்பரிசமும் இப்போதும் சிறு துகள்களாக வீட்டு அறைகளில் மிதந்து கொண்டிருந்தன. அவள் வளர்த்து வந்த கிளிகள் எல்லாம் பூனைக்கு இரையாகிப்போயின.

என்றாலும் அவள் வீட்டின் மூன்றுமுக ஜன்னல்களும், உயர்ந்த படிக்கட்டுகள் கொண்ட மாடியறைகளும் ஊர்வாசிகளுக்கு பிரமிப்பை இப்போதும் தந்தபடிதானிருந்தன. மணல் கோட்டையில் வசிக்கும் எந்தப் பெண்ணும் வனமாலையின் வீட்டிற்குள் வந்ததேயில்லை. அவளை துர்நடத்தை கொண்டவள் எனவும் பார்த்த நிமிடத்திலே ஆண்களை வசியபடுத்திவிடும் வசியக்காரி எனவும் பெண்கள் ஏசினர். ஆனாலும் என்ன ஊர் பெண்கள் எல்லோர் மனதிலும்



படிப்பகம்

சிறிய ஆசையொன்று பாம்பை போல சுருண்டு கிடந்ததை அவர்கள் அறியாமலிருந்தனர். மனதின் விசித்திரப் போக்கில் அந்த ஆசை வளரவும் செய்தது. எல்லாப் பெண்களும் ஒரு முறையாவது வனமாலையின் வீட்டினுள் போய் பார்த்து வரவே விரும்பினர். ஆனால் வனமாலையோ எந்தப் பெண்ணையும் தன் வீட்டில் அனுமதித்ததேயில்லை.

உடல் பருத்துப்போன பின்பு அவள் வெளியில் எங்கும் போவது கிடையாது என ஆனது. மூன்று படுக்கையறைகள் கொண்ட அந்த மாடியறையில் கிடந்த கறுப்பு கட்டில்களில் மரக்காளான்கள் முளைத்துப் போயிருந்தன. வனமாலை ஜன்னலை ஒட்டிய படுக்கை கொண்ட அறையில்தான் இருந்தாள். அந்த அறையில் அவளது உருவப்படம் ஒன்று சுவரில் தொங்கிக் கொண்டிருக்கும். குழந்தைகள் எவரும் அவள் வீட்டின் முற்றத்தில் வந்து விளையாடப் பயந்தனர். அவளது கடந்த கால வசீகரத்தையும் நிர்வாணத்தையும் கண்டிருந்த மரப்பல்லிகள் அந்த அறையின் உத்திரத்தை விட்டு போகவேயில்லை. இரவில் அவை விடாமல் சப்தமிட்டு அவளின் தனிமையைப் போக்கின.

சிறுவயது முதலே வனமாலை கனவுகளால் அழைக்கழிக்கப் பட்டாள். கனவுகள் மெல்லிய சிறகை அசைத்தபடியே அவளைச் சுற்றி பறந்து கொண்டிருந்தன. வயதான தாத்தாவால் வளர்க்கப்பட்ட அவள் நிறைய பகல் கனவுகள் காணுபவளாக வளர்ந்தாள். இந்த உலகில் உள்ளவற்றையும், இல்லாதவை பற்றியுமான அவளது கனவுகள் பல்கி பெருகின. கனவுகள் எதிர்காலத்தை சொல்லக்கூடியது என்பதை பற்றியும், ஆண்களுக்கு வரும் கனவுகள் பெண்களுக்கு வருவதில்லை என்பதை பற்றியும் சிறு வயதிலேயே அவள் அறிந்திருந்தாள். வயசாளிகள் அனைவரும் கனவுகளால் துரத்தப்படுவதாக அவளது தாத்தா தினமும் புலம்புவார். அவளுக்கு பதினோரு வயதானபோது இது போல தீய கனவு ஒன்றைக் கண்ட தாத்தா அவளையும் கூட்டிக்கொண்டு மணல் கோட்டையிலிருந்து விலகி வடக்கே புறப்பட்டுப் போனார். அவர்கள் பயணமாகிக் கொண்டிருந்த கரிசல் பூமியில் இரவு வெகு சீக்கிரமாகவே வந்து விடுகிறது. வெட்ட வெளியில் இருவரும் உறங்கினர். அன்று தாத்தா ஒற்றைக்கண் உள்ள நாய்க்கூட்டம் தன்னை விரட்டுவதாக கனவுகண்டு திடுக்கிட்டு விழித்து கையில் கத்தியுடன்

www.padippakam.com

வெட்டவெளியில் அமுங்கிய காற்றை வெட்டியபடி திசையில்லாமல் இரவெல்லாம் ஓடினர். வனமாலை கனவு கொண்டாள். மான்குட்டியொன்று நீரில் நீந்திக் கொண்டிருந்தது. நீரில் மெல்ல மானின் நிறம் கரைந்து போக நுரை போன்ற வெண்மையுடன் மான் துள்ளி கரையேறியது. வெண்ணிற மானின் பாய்ச்சலால் உடல் விழிப்புற்றபோது மண்ணில் ரத்த துளிகள் சிதறியிருப்பதை அறிந்தாள். உடல் அசதி கொண்டது.

வெட்டவெளியில் ருதுவாகும் பெண்கள் நட்சத்திரங்கள் போல அலைக்கழிக்கப்படுவார்கள் என தாத்தா சொன்னபோது அவள் பயந்து மணல் கோட்டைக்கு திரும்பிவிட்டாள். அது முதல் அவளது கனவுகளே அவள் நாட்களை உருவாக்கின. மணற்கோட்டையின் பூர்வீகவாசிகள் எல்லோரும் கனவின் விசித்திர அறைகளில் வாழ்ந்து கொண்டிருந்தனர். ஊரே தன் முந்தைய உருவத்தின் கனவில் தானிருந்து வந்தது.

பின்நாட்களில் வனமாலையின் வீட்டில் கனவுகளுக்கு பலன் சொல்வதற்காகவே பதிமூன்று ஆண்கள் இருந்தனர். அவர்கள் பகல் நேரத்தில் கீழ் கூடத்தில் சீட்டாட்டம் ஆடியபடியேயிருப்பார்கள். இரவில் சமையற்கட்டில் உறங்குவார்கள். அவர்கள் தன் முகம் காட்டாது பலன் சொல்லுவார்கள். அவர்களும் கூட சென்ற கோடை காலத்தில் அவளை பிரிந்து போய் விட்டனர். பதிமூன்று பேர்களில் இளையவனான ஒருவன் மட்டும் பெண்களின் விபரீத கனவுகளுக்குப் பயந்து வழிப்பாதையில் இருந்த தாழஞ்சுனையில் மூழ்கி இறந்து போய்விட்டான் என தகவல் அவளுக்கு கிடைத்தது. அவனுடைய மயில்கரை வேஷ்டியொன்று சமையற்கட்டின் கொடியில் நீண்டநாளாக உலர்ந்துகொண்டேயிருந்தது.

வனமாலையின் வீட்டுக் கதவினை தட்டும் ஆண்கள் எவரும் தன் உரு மறைந்தே வந்தனர். அந்நாட்களில் வீட்டில் அவளது சௌந்தரியம் பெரிய வலைபோல எங்கும் விரிந்து கிடந்தது. எப்போதும் ரகஸிய ஆண்களின் நிழல் நடமாட்டம் அந்த வீட்டில் இருந்தபடியே இருந்தது. மணல் கோட்டையில் வருடத்திற்கு நான்கு நாட்கள் மட்டுமே மழை பெய்யும். அங்கிருந்த நூறு வீடுகளுக்கும் அந்த மழையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்.



படிப்பகம்

திடீரென ஒரு மதியம் உறைந்துபோய் வெயிலின் திரை கிழிந்து மழை ஊரில் வெளிப்படும். அந்நாட்களில் ஆணும் பெண்களும் உறங்குவதில்லை. மழையின்போது உறங்க முடியுமா என்ன? ஓட்டு வீடுகள் மழைச் சப்தத்தை பெருக்கின. ஈரம் காணாது நடுங்கிக் கொண்டிருந்த தெருச்சுவர்கள் மழையால் ஈர்ப்பு கொண்டன. சரியாக நாலே நாள் பெய்த பின்பு மழை அடையாளம் மறைந்து ஊர் தன்வசப்படும். அந்த மழையும் கூட தாது வருசத்தில் வராது போனது.

இது போன்ற கோடை இரவுகளில் வீடுகளில் உறங்கும் ஆண்களை பெண்கள் வெறித்துக் கொண்டிருப்பார்கள். உறக்கத்தின் போது பிறக்கும் அழகு தனியே மிளிர்ந்து கொண்டிருக்க வீட்டுப் பெண்கள் சப்தம் செய்யாது விழித்திருப்பார்கள். எப்போதாவது அசந்து உறங்கிக் கொண்டிருக்கும் பெண்ணை பார்த்த ஆண் பயமும் துக்கமும் கொள்வது தவிர்க்க முடியாதது.

கோடைக்காலம் முடிவற்று போய்க்கொண்டேயிருந்தது. துர் சகுனங்களின் காற்று ஊரை சுற்றி வீசிக்கொண்டேயிருந்தது. புழுதியை வாரி இறைக்கும் காற்றால் வீட்டுக் கதவுகள் அரிபட்டன. எல்லோரும் சோகை கொண்டது போல இருந்தார்கள். தூக்கத்தில் நடப்பவர்கள்போல இயங்கிக் கொண்டிருந்தனர். தினமும் ஊரைச் சுற்றி நட்சத்திரங்கள் அறுந்து வீழ்வதை கண்டு ஆண்களும் பெண்களும் துயர்வடைந்தனர்.

அந்நாட்களில் தான் வனமாலைக்கு கனவு வந்தபடி யிருந்தது. கனவுகளுக்கு பலன் சொல்லும் சுப்பையா பிள்ளையை கூட்டிக்கொண்டு ஊர் வந்து கொண்டிருந்தவர்கள் கூட தீவினையின் வளையங்கள் ஊரை பற்றிக் கொண்டதை தொலைவிலே கண்டனர். பசு ஒன்று கர்ப்பம் கலங்கி மஞ்சள் பாரித்த உடலும் சூரியனை வெறித்த கன்றுடனும் இறந்து கிடந்தது. சுப்பையா பிள்ளை ஊரில் நுழையும்போதே மரண வாடையை நுகர்ந்தபடியே வந்தார். பசுவின் மரணத்தால் பயங்கொண்ட சிறுமிகள் வீட்டின் உள் அடுக்குகளில் பதுங்கிக் கொண்டு பெருமூச்சு விடுவதும் முணுமுணுப்பதும் துல்லியமாக கேட்டது.

இப்போதும் தானியங்கள் மீதிருந்த வீடாக இருந்தது வனமாலையிடம் மட்டுமே. தெருவில் படிந்த கறுப்பின் ஊடே விளையாடிக்கொண்டிருந்தார்கள் சிறுவர்கள். இரட்டை பெண்களான பெரிய பாண்டியம்மாவும், சின்னப் பாண்டியம்மாவும் உடல் நலிவுற்று சோர்ந்து கிடந்தனர். மூத்தவள் சின்னப்பாண்டியம்மாளின் வற்றிய மார்புகளை பார்த்தபடியே 'நான் செத்து போக போறனடி. உன்னைய விட்டுட்டு' என சப்தமிட்டுக் கொண்டிருந்தாள். சின்னவளுக்கு பேச்சு கொள்ளவில்லை. இருவருமே சூடான சோளக்கஞ்சிக்கு ஆசை கொண்டிருந்தனர். சின்னப்பாண்டியம்மாள் அக்காளிடம் தோன்றிய முகவிகாரங்களைக் கண்டு அஞ்சியபடியே உறங்கினாள்.

கவலை கண்டிருந்த சிறுவர்கள் சாணம் உலர்ந்த திண்ணையை விட்டு அகலாது தெரு பார்த்தபடி இருந்தனர். மரங்களை விட்டு காற்று பிரிந்து போயிருந்தது.

வனமாலையின் வீட்டிற்கு சுப்பையாபிள்ளை வந்தபோது மாலையாகியிருந்தது. ஊரை சுற்றிலுமான திறந்தவெளியில் இன்னமும் வெளிச்சம் அடங்கவேயில்லை. மாடி அறைகளில் அவர் நுழைந்து அவளைக் கண்டபோது அவள் முதுகு நீண்ட நாற்காலியை போட்டு ஜன்னலை வெறித்தபடியே உட்கார்ந்திருந்தாள். பருத்த அந்த உடலை பார்க்க அசூயையாக யிருந்தது. தரையெங்கும் உலர்ந்து கிடந்த தாம்பூல சக்கைகளை வெறித்தபடியே அவர் சொன்னார்,

> "இனிவரும் நாற்பது நாட்களுக்குள் இவ்வூர் அழிந்துவிடும். ஆடுகளை போல நாட்களும் செந்நிறம் கொண்டுவிடும்".

ஓலைப்பெட்டி நிறைய தானியமும் இரண்டு நாணயமும் வைத்து அவள் மரப்பலகையில் வைத்திருந்ததை எடுத்துக் கொண்டு வீடு விலகி ஊர்வழி வரும்போது மடத்தில் இருந்த பிச்சைக்காரர்கள் இருவரும் அவரை அன்றிரவு அங்கேயே தங்கச் செய்தனர்.

அன்றிரவு சுப்பையா பிள்ளையும் கனவு கண்டார். காது நீண்ட குதிரையொன்று குமிழ் பிடி கொண்ட கதவை தட்டிக் கொண்டேயிருந்தது. குதிரையின் உடல் நீண்டு தெருவெங்கும்



படிப்பகம்

வளைந்திருந்தது. இடைவிடாத தட்டுதலால் கதவு திறந்து கொள்ள குதிரை படியேறி உமிப்படுக்கையொன்றில் படுத்துக் கொண்டது. கனவின் கதியின்று நழுவி விழிப்புற்ற சுப்பையாபிள்ளை எழுந்து கொண்டார். குதிரை தட்டிய கதவு யாருடைய வீடு எனப் புரிந்தது. பொழுது விடிந்ததும் அவர் வனமாலையின் வீட்டிற்குள் சென்றார்.

சிறுபடிக்கட்டுகள் கொண்ட மரக்கட்டிலில் அவள் மட்டுமே உடைகளற்று உறங்கிக் கொண்டிருந்தாள். வெயில் அவள் கால்விரல்களைத் தொட்டுக் கொண்டிருந்தது. சுப்பையா பிள்ளையின் காலடி சப்தத்தால் விழித்த அவள் எழுந்து கொள்ளாமல் புரண்டபோது வீங்கிய ஸ்தனங்கள் சரிந்தன.

அவள் முகத்திற்கு எதிராக சுப்பையா பிள்ளை சொன்னார்,

"இந்த முழுநிலவின் நாளுக்கு முன் உன்னை தேடி ஒருவன் வருவான், அவனே நீ சந்திக்கும் கடைசி ஆண்".

அவர் போன நாளின் மறுதினம் பகல் நீண்டு சென்று கொண்டேயிருந்தது. ஊற வைத்த தானியங்களை தின்றபடியே ஜன்னலின் அருகே உட்கார்ந்திருந்தாள் வனமாலை. தெருவில் சப்தத்தை கொட்டியபடியே மேய்ந்து கொண்டிருந்த கோழிகள் உணவாகிப் போனதால் நிசப்தம் மட்டுமே நிரம்பியிருந்தது.

மேலத்தெருவின் கடைசி வீட்டுப் பெண்கள் நால்வர் ஒன்றுகூடி தானியக்குதிரை கவிழ்த்தனர். தூசிகளும் கல்துகள்களும் நிரம்பிய தானியங்கள் கொஞ்சம் மீதமிருந்தன. வாசல் பக்கம் வந்து தானியத்தை புடைத்தனர். தானியங்களின் உரசல் சப்தம் கேட்டு சுல்பொந்துகளிலும் கிணற்று உள் அடுக்குகளிலும் மறைந்திருந்த பறவைகள் விழிப்புற்று படை படையாக கடைசி வீட்டு முன் இறங்கின. பறவை கூட்டத்தின் வரவால் அந்தப் பகல் துகள் துகளாகி சப்தங்களால் நிரம்பியது.

வீட்டின் முன் விழும் பறவைகள் மண்ணில் தலையை சிலுப்பி சுல்துகளை கொத்துவதும், தானியத்திற்காக வாயைப் பிளப்பதையும் கண்டு, முறத்தை அப்படியே வைத்து விட்டு அந்தபடியே அந்தப் பெண்கள் தானிய அறைகளுக்குள் ஓடியபோது பல பறவைகள் அலகில் தானியத்தோடு ஊரைப் பிரிந்து பறக்கத் துவங்கின. ஊர் மடத்தில் படுத்துக் கிடந்த இரண்டு பிச்சைக்காரர்களும்கூட இதைப் பார்த்தனர். பறவைகள்

www.padippakam.com

போனபிறகு வெளிறிய ஆகாசத்தை ஏறிட்டுப் பார்க்க ஊரில் எவருக்கும் மனம் துணியவில்லை.

தண்ணீர் அருகிப் போனதால் வனமாலையின் உடலில் கசகசப்பும் காளான் வாடையும் பெருகத் துவங்கியது. கண் இமைகள் ஒட்டிக்கொண்டு பார்வையை மறைந்தது. பெருமூச்சிட்டவாறே அவள் நாற்காலியில் பகல் எல்லாம் உட்கார்ந்திருந்தாள்.

ஊரின் கிழக்கேயிருந்த வேதக்கோவில் காற்றால் அழிவுற்றது. உப்பின் வாடை பரிந்த கோவில் கதவுகள் சக்கைகளாக பிரிவுண்டன. உலர் இலைகளும் நத்தை கூடுகளும் கோவிலில் நிறைந்தன. மரச்சிலுவையை அப்பிய நத்தைக் கூடுகளை கண்ட பாதிரியும் அவரது மணமாகாத மகளும் உலர் இலைகளுள் மண்டியிட்டு பிரார்த்தனை செய்தனர். பாதிரியின் மகளுக்கு ஊரைவிட்டு பிரிந்துபோன ஸ்நேகிதிகளின் ஞாபகமும் கிணற்றில் உதிரும் பன்னீர் பூ மரம் அழிந்து நாளும் நினைவில் வர புழுதிக் காற்றை சபித்தபடியே கண்ணீர் சிதற பிரார்த்தித்தாள். அவளது கண்ணீரின் சப்தம் வேதக் கோவிலில் சென்று பதுங்கிக்கொண்டது. பாதிரியின் வீட்டில் மட்டுமே உயிரோடிருந்த சேவல் ஒன்று இடைவிடாமல் பகலிலும் கூவி ஓய்ந்தது.

காலி வீடுகள் அதிகமாகிப் போனதால் ஆள்முகமறியா இருட்டு தெருவில் நிரம்பிற்று. மண் சட்டிகளில் வறுபடும் தானியங்களுடன் எறும்புகள் கருகும் வாடை ஊரில் சுழன்று கொண்டிருந்தது. எறும்பு புற்றிலிருந்த தானியம் தேடி கரிசல் வெளியை தோண்டி கலைந்தனர் ஆண்கள்.

நிலா வளர்ந்த் நாட்களில் வனமாலையின் உடலில் வெடிப்புகள் துவங்கின. வேதனையாலும் இருட்டாலும் அவள் படுத்தே கிடந்தாள். ஜன்னி கண்டவள் போல பிதற்றினாள். ஊரின் தனிவெளியில் நின்றிருந்த மரத்தின் கிளைகளில் இறந்துபோன குழந்தைகள் தொங்கிக்கொண்டு அவளை அழைத்து சிரிப்பதாக கற்பனை கொண்டாள்.

வியாழன் அன்று ஊர் அறிந்திராத வெக்கை காற்று கிளம்பியது. வீட்டின் கூரைகள் பறந்து போயின. கோழிக் கூண்டுகள் வானளவு உயர்ந்து சுழன்றன. வைக்கோலை வாரி



படிப்பகம்

www.padippakam.com

இறைத்தது காற்று. பெரிய பாண்டியம்மாள் இறந்து போனாள். பிணத்தின் பின்னே போன இரண்டு பிச்சைக்காரர்களும் ஊரே பயம்கொள்ளும்படி அழுதனர். அந்த நாளில் பல வருடத்தின் பின்பு மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து தெருவில் நடமாடினாள் வனமாலை.

நடப்பது வேதனை தருவதாகயிருந்தது. ஊரின் புற வெளிவரை நடந்து திரும்பியபோது பார்வை மங்கி எதுவும் புலப்படாமல் போனது அவளுக்கு. எப்பக்கம் வீடு உள்ளது என அறியாது காற்றில் எதையோ தேடுபவள் போல அலைவுற்றாள். பின் அந்த பிச்சைக்காரர்களே அவளை வீடு அழைத்து வந்தனர்.

அதன்பின் அவளுக்கு நாட்கள் மறந்து போயிற்று. முடிவற்ற ஒரே நாளில் தான் இருப்பதாகவே உணர்ந்தாள். பின் வீட்டின் மண் கலயம் ஒன்று உருண்டு உடைவதையும் யாருடைய காலடி சப்தமோ வீட்டில் அலைவதையும் ஒருமுறைக் கேட்டாள். அந்த சப்தம் ஆணின் காலடியாகவேயிருந்தது. சுப்பையாபிள்ளை சொன்னதன் ஞாபகம் வந்தது.

காலடி சப்தம் மிக அருகில் வந்து அவள்முன் நின்றது. அவள் தலையைத் திருப்பினாள்.

“சாவிய எங்க வச்சிருக்கே”

அந்தக் குரல் மிக கடினமானதாக இருந்தது. என்றாலும் அதை அவள் விரும்பினாள். அது அவளுக்குள் வேட்கையை அதிகப்படுத்தியது. அவளது தலையணைக்குள் முரட்டு கையொன்று எதையோ தேடி அவளை புரட்டியது. அவள் மயிர் நிறைந்த அந்த புறங்கையை பற்றிக் கொண்டாள். பிசுபிசுப்பான தன் உதட்டோடு அந்த கைகளை பதித்தபோது அந்த மனிதன் அசைவில்லாமல் நின்றான்.

''கட்டிலில் உட்கார்'' — என்ற அவள் குரலுக்கும் அடிபணிந்தான். அவள் உஷ்ணமூச்சை அறிந்தபடியே கேட்டாள்.

“வெளியே இப்போது பகலா, இரவா”

“பகல் முடியப்போகிறது”.

அவன் உள்ளங்கையிலிருந்து அவனுக்கு இருபது வயதுக்குள்தானிருக்கும் என அறிந்து கொண்டாள். அவன் உடல் கூழாங்கற்கள் போல இறுகி சில்லிட்டிருந்தது. நீண்ட



படிப்பகம்

நாட்களுக்குப் பின் தன் படுக்கையில் அமர்ந்திருக்கும் மனிதனின் தலைமயிரை அவள் விரல்கள் கோதின. சுருள் சுருளாக தலைமயிர். புரண்டு படுக்கையின் கீழ் இருந்த நாணயங்கள் சிலவற்றை எடுத்து அவன் உள்ளங்கைகளில் வைத்து கிசு கிசுக்கும் குரலில் சொன்னாள்.

"இன்றிரவு இங்கேயே இருந்துவிடு. எல்லா நாணயமும் உனக்கு உரிமையாகிவிடும்".

அவன் நாணயத்தை தன் பல்லால் கடித்துப் பார்த்துவிட்டு கைகளில் பொதித்துக்கொண்டான். அவனிடமிருந்து மறுப்பு வராதலால் அவள் குரலை உயர்த்தி சொன்னாள்.

"நான் குளிக்க வேண்டும். எங்காவது போயி தண்ணீர் எடுத்து வாயேன்".

அவன் எழுந்து அறையைவிட்டு கிளம்பும் முன் அறை முகப்பில் இருந்த மர அலமாரிகளைத் திறந்தான். நூற்றுக் கணக்கான ஜோடி செருப்புகள் நிறமிழந்து வாய் பிளந்து சரிந்தன. அவன் தண்ணீர் தேடி சென்றான்.

அவன் திரும்பியபோது ஊரின்மீது பூரண நிலா மிதந்து கொண்டிருந்தது. வீடுகளை, தொழுவங்களை, அறுபட்ட மரங்களை வசீகரமாக்கிக் கொண்டிருந்தது வெண்ணிறம். வீட்டின் பின் கதவுகளை திறந்தான். தண்ணீர் அலம்பும் சப்தம் கேட்டுவிடாமல் பானையை கீழே வைத்தான்.

மரப்படிக்கட்டுகள் வழியாக வனமாலையை அழைத்துக் கொண்டு வந்தான். அவள் ஏதோ ஒரு கனவின் பாதியிலிருந்து அறுபட்டு எழுந்து வந்தாள். துவை கல்லில் உட்காரச்செய்து தண்ணீர் ஊற்றினான். தண்ணீரின் சப்தம் கேட்டு உறங்கிக் கொண்டிருந்த குழந்தைகள் விழித்துக்கொண்டு நாக்கை சப்பியபடி கைகளால் எதையோ தேடி பிதற்றினர் பலவீடுகளிலும்.

ஈர உடலுடன் அவளை அறைக்கு கூட்டி வந்தான். நெடு நாட்களாக திறக்கப்படாத அந்தப் புட்டிகளை அவன் திறந்தான். அத்தரின் வாடை அறையை நிரப்பியது. காற்றின் வேகத்தில் ஊரெங்கும் பரவியது. நெசவாளியும் குழந்தைகள் அற்றவளுமான

சௌந்தரவல்லி இரவில் திடீரென பரவிய அத்தர்வாடை தாங்காது மயங்கி விழுந்தாள்.

ஆண்களை விலக்கி உறங்கிக் கொண்டிருந்த பெண்களும் கூட இவ்வாடையால் நடுக்கமும் வேட்கையும் கொண்டு ஆண்உடல் புகுந்தனர். அவன் அறையிலிருந்த எல்லாப் பொருட்களையும் மூட்டை கட்டினான். சிறுவிளக்கு ஒன்று மட்டுமே அந்த அறையில் எரிந்து கொண்டிருந்தது. குருவியென தட்டளியும் விளக்கின் சுடரில் வனமாலையைப் பார்த்தான். அவள் உடல் திறந்து கிடந்தாள். விளக்குடன் நெருங்கி வரும்போது அவள் நிழல் சுவரேறி உயர்ந்து விட்டத்திற்கு வந்தது.

விடிவதற்குள் ஒரேயொருமுறை அவளை முத்தமிட்டான். கசப்பும் உப்பின் வாடையும் கொண்ட முத்தம் அது. நாற்பதாவது நட்சத்திரம் எரிந்து வீழ்ந்த காலையில் புறப்பட்டு ஊர்விட்டுப் போனான். ஊரை அடுத்த நாளும் அத்தரின் வாசனை சுற்றிக் கொண்டிருந்தது. மூன்றாவது நாள் அவள் வீட்டில் நுழைந்த பிச்சைக்காரர்கள் சிதறிய நாணயங்கள் மூன்றை கண்டெடுத்தனர். திறந்து கிடந்த படுக்கையறையில் வனமாலையின் ஸ்தனங்களில் நகங்களை பதித்தபடி நின்றிருந்த வெருகுபூனை ஆள்முகம் கண்டு தாவி ஓடியது. அவர்கள் அருகில் சென்று பார்த்தபோது வனமாலை இறந்து இரண்டு நாளாகிப் போயிருந்தது.

# வரப் பெற்றோம்

**காத்திருப்பு (கவிதை)**

ஆசிரியர் : ரவி சுப்ரமணியன்
விலை : 20.00
வெளியீடு : அன்னம், சிவகங்கை

**நானும் சாத்தானும் நண்பர்கள் (கவிதை)**

ஆசிரியர் : வளன்
விலை : 12.00
வெளியீடு : அனிதா பிரசுரம்,
23/2, கிழக்கு புது பைகாரா தெரு,
உறையூர், திருச்சி

**மேலே சில பறவைகள்**

ஆசிரியர் : கால சுப்ரமணியம்
விலை : 12.00
வெளியீடு : லயம், பெரியூர், சத்யமங்கலம்

**முகங்கள்**

ஆசிரியர் : நிஷா
விலை : 15.00
கிடைக்குமிடம் : நிஷா, 2, மட்டக்காரத் தெரு, மேட்டுப் பாளையம்.

**இன்னொரு சுவடு**

ஆசிரியர் : நாசர்
விலை : 24.00
வெளியீடு : தாமரைச் செல்வி பதிப்பகம் 31/48, ராணி அண்ணா நகர் சென்னை–78

**மீண்டும் அவர்கள்**

ஆசிரியர் : ஞானக் கூத்தன்
விலை : 50.00
வெளியீடு : விருட்சம், 7, ராகவன் காலனி சென்னை–33.

**கானல் வரி**

ஆசிரியர் : என். எஸ். ராமசாமி ஐயர்
விலை : 15.00
வெளியீடு : பரத்ராம், 27, ராஜாஜி தெரு, காந்திநகர், மதுரை

**ஒரு எருதும் சில ஓநாய்களும்**

ஆசிரியர் : பா. இராமமூர்த்தி
விலை : 35.00
வெளியீடு : திலகம் பதிப்பகம், 5, வெங்கடேச சௌதிரி சாலை, சென்னை–45.

www.padippakam.com

## பரிவாரம்

தொகுப்பாசிரியர் : எஸ். சங்கர நாராயணன்
விலை : 30.
வெளியீடு : அன்னை ராசேசுவரி பதிப்பகம்,
41, கல்யாண சுந்தரம் தெரு,
பெரம்பூர், சென்னை–11.

## சுட்டித் தேவன்

தொகுப்பாசிரியர் : டாக்டர். எஸ். குலசேகரன்
விலை : 22.50
வெளியீடு : அமிழ்தம் பதிப்பகம்,
15, முத்துப்பிள்ளைத்தெரு,
வ.உ.சி. நகர், வேலூர்–632 001.

## நவீனத் தமிழும் பின் நவீனத்துவமும்

தொகுப்பாசிரியர் : தமிழவன்
விலை : 50.00
வெளியீடு : காவ்யா,
16, 17th 'E' cross, Indira nagar,
Bangalore-38.

## காப்ரியல் கார்ஸியா மார்க்வெஸ் மலர்

தொகுப்பாசிரியர் : கோணங்கி
விலை : 100.00
வெளியீடு : கல்குதிரை, 6/162, இந்திரா நகர்
கோவில்பட்டி–627 702.

## ஒரிஜினல் நியூஸ்ரீல் சிறுகதைகள்

ஆசிரியர் : பா. வெங்கடேசன்
விலை : 25.00
வெளியீடு : முன்றில்



படிப்பகம்

www.padippakam.com

# கவிதைகள்

(மா. அரங்கநாதனுக்கு)

## "நகுலன்"

1

எங்கிருந்தோ வந்தான்
என்கிறோம்
அவனும் இங்கிருந்துதான்
வந்தான்
அவன் அங்கு சென்றதால்

2

ஆமாம்
ஆம் ஆம்
அந்தச் சூரல் நாற்காலியில்
சுருண்டு
நான்
நான்
சுருண்டு
தான்
எவரெவர்
சுருண்டு
எவரெவராவர்
என்உள்ளம்
என்ற தாழ்வாரத்தில்
என்னென்ன
காட்சிகள்
பிரேத உலகில்
என்முன், என்பின்
உபசாந்த உலகில்
முன்னெறி தெய்வங்களென
என்னைப் பெற்றோர்
பிறகு இதோ என்னருகே
அயல் நாட்டிலிருக்கும்
ஒரு சகோதரி
அவள் அருகில்
இந் நாட்டிலேயே
வேறொரு பிரதேசத்தில்
என் இன்னொரு சகோதரி



படிப்பகம்

www.padippakam.com

சற்றே தொலைவில்
என் முன் என் பின்
அருகில் வேறொருவன்
பக்கத்தில்
என் அறையில் சிதறிக்
கிடக்கும் புத்தகங்கள்
எழுதிக் குவித்த
நோட்புக்குகள்
சுவர்த் தட்டில்
சர்ப்பக் குடையின்
கீழ்ச் சுடலை ஆண்டி
கட்டிலின் கீழ்
காலிக் குப்பிகள்
அதோ வருகிறாள்
சுசீலா
வெளி வாசல் வழி
வருகிறார்
சாக்ஷாத் சச்சிதானந்தம்பிள்ளை
என் நாடி மீது
இவ்வுருண்டு செல்லும் வினாடிகள்

இன்னும் எவ்வளவு
நாட்கள்
பேசாமல் இரு
இது பிரம்ம முகூர்த்தம்.

3

வேளைக்குத் தகுந்த
வேஷம்
ஆளுக்கேற்ற
அபிநயம்
இதுதான்
வாழ்வென்றால்
சாவதே சாலச் சிறப்பு

4

வி. ராதாகிருஷ்ணன் என்று இரும்புத் தகடில் அச்சால் பொறிக்கப்பட்டிருந்ததை ஆர். ராதா கிருஷ்ணன் என்று படித்தேன் என்று சொன்னேன். இதைக் கேட்ட சச்சிதானந்தம் பிள்ளை "தெரியவில்லை, இல்லையா" என்று சொல்லிச் சிரித்தார்.

முன்றில் 19 / 24

படிப்பகம்

www.padippakam.com

5

என்ன
செய்து கொண்டிருக்கிறாய்?
என்றும்
செய்து கொண்டிருப்பதை
வகை மாறி
வேறுவேறு விதமாகச்
செய்து பார்க்க ஒரு முயற்சி
பலிக்குமா?
கவலையில்லை.

6

எப்பொழுதும்
அவள் நினைவு
தான் அவள்
யார்
என்று கேட்காதீர்கள்
சுசீலாவின் பல உருவங்களில் ஒரு உருவம்.

7

ஜீ. கிருஷ்ணகுட்டியின் ஒரு கேரளத்துப் பெண் என்ற ஆங்கில நாவலைப் படித்தபின்:

ஒரு குறள்

என் செவியில் ஒலித்தது

அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை

8

எங்குதான் கவிதையில்லை. என் கவிதையை நான்தான் எழுதவேண்டுமென்ற நிர்ப்பந்தம் இல்லை. படித்த புத்தகங்கள், என் போன்ற பிறர், கிடைத்த அனுபவங்கள், கண்ட கனவுகள், நினைவுகளின் பேயாட்டம்-எல்லாவற்றிலும் என் கவிதைகளை அல்லது நான் எழுதத் தவறிய கவிதைகளைக் காண்கிறேன்.

9

தேடித்திரிந்ததைக் கண்டது
நாடி வந்தவனைக்
கண்டபின்தான்



படிப்பகம்

www.padippakam.com

10

முட்டையிட்டது ஒரு பெட்டைக் கோழி
சண்டையிட்டது ஒரு சேவல்
"தூயர் நறியர் நின்பெண்டிர்
சேய் பயந்தனம்
பேய் அனையம் யாம்"

# உப்புத் தண்ணீர்

ஞானக்கூத்தன்

வாய்ல போடாத வார்த்தைங்களால
கெல்லட்டு ஐஸ்கூல் வாத்தியை வெய்ஞ்சி
படிப்பப் பாதில வுட்டுப் புட்டானாம்
கண்ணாம் பேட்ட கிருஸ்ன குமாரு

இன்னா கெட்டுது இன்னா வுட்டுது
படிப்பப் பாதில வுட்டதனாலே

புல்லி விலுந்த வாலைப் பலம் வித்தான்
திரிச்சி வெள்ளவெங் காயத்த வித்தான்
நாலு தெரு சுத்தி நாலு காசு கண்டு
கோணி நெனய பொதினா வித்தவளக்
கூட்டியாந்து குடும்பம் பண்ணி
இன்னா கெட்டுது
ஏபிசிடி ஒப்பந்தாடில

ராசாக் கணக்கா தலையுல தொப்பி;
சேப்பு சட்டை; கழுத்துப் பட்டை;
இடுப்புல வாரு; மறைவுல கத்தி
சீன்சு; எரநூறு ரூவா ஷ்சுவு
இன்னா கெட்டுது ஏப்பிசிடி
ஆனா இப்ப லுங்கி மூக்குக்
கண்ணாடி இல்ல.....

அவுத்துக் கீர இன்னிக்கு விக்கணும்
வண்டியத் தள்ளினா பயலும் வாரான்
யாரோ கூப்புடத் திரும்பினா
கெல்லட்டு வாத்தி கீரெ கீரெ
கிருஷ்ணு நீயா இங்குறார்
ஆமாஞ்சார் இது எம் மொதப்புள்ள
வருவான் படிக்க இங்குறான்
குமாரு கண்ணுல தண்ணி
வழிச்சுத் தள்ளுற உப்புத் தண்ணி.



படிப்பகம்

www.padippakam.com

# ஏற்கெனவே இடம் பிடித்தவர்கள்

**கலாப்ரியா**

ஒன்று
காலி செய்திருந்தார்கள்
அல்லது
அதிருப்தியுடன் சமரசம்
செய்யாது
காலியாகி யிருந்தார்கள்

** ** **

காலியாயிருந்த இடங்களில்
காலியாக்கிக் கொண்டு
வந்தவற்றை
அடுக்கி
நிரப்பி
திணித்து.....

ஒன்று
போதவில்லை
அல்லது
இடம் பிடிக்கவில்லை.

தலைச்சுமை வியாபாரிகள்
வாசலில்
சற்று புதிய எதிர்பார்ப்புடன்
குரல் கொடுக்கிறார்கள்
சற்றும் பழக்கமில்லாத
பொருட்களைக்கூட
வேணுமா என்று கேட்டு
வெறுமனே திரும்புகிறார்கள்

பெற்றோர்களின்
பயங்களை மீறி
குழந்தைகள்
விளையாடப்
பக்கத்தில் இடமிருந்தது

அங்கணாக் குழி
அடைத்துக் கொள்ளாததிலேயே
திருப்தி வந்துவிட்டது
மனைவிக்கு



படிப்பகம்

www.padippakam.com

தவிரவும்
குழந்தைகளின்
அசட்டுக் கேள்விகளுக்கு
வெட்கமாய்ப் பொய்
சொல்லத் தேவையின்றி
மறைவாய் – ஒரு
மாடமிருந்தது
'துணிகள்' வைத்துக் கொள்ள

** ** **

எப்போது காலிசெய்யச்
சொல்வார்களோ
என்கிற
அவள் கவலை,
ஏற்கெனவே
இடம் பிடித்தவர்களைப்
போல்
எனக்கொரு
இடம் ஏற்படவில்லை
என்கிற என் கவலை
தத்தம் முரண்களுடன்
ஒன்று சேர்கிறது

அவள் அலுப்பு
என் தினவுகளை
மறுத்துவிடாத
முன்னிரவுப் பொழுதுகளில்.

## உலா வரும் சிலை

பாரதி ராமன்

மஞ்சள் நீராடி
மணம்கமழ் நீறுபூசி
குங்குமம் பொட்டாய் வைத்து
கூந்தலைச் சீவி முடித்து
வேப்பிலை இடைதரித்து
வெந்தழல் ஓடி மிதித்து
வெள்ளி ஐந்து விரதம்காத்து
வேண்டியது எல்லாம் இன்று
வீணாகப் போச்சு

அம்மன் திடீரென்று காணாமற் போச்சு!



படிப்பகம்

நடைபாதைக் கோயில்தான்
நாகத்தலை சிலைதான்
நகைநட்டு இல்லைதான்
நடப்போரின் தெய்வந்தான்
அடையாளம் இப்படிச் சொல்லி
'காணவில்லை'யில் கூறச் சொல்ல
தொலைக்காட்சி நிலையமோ
போலீஸ் அத்தாட்சியும்
போட்டோ வும் கேட்டது
அணிந்திருந்த ஆடை விவரமும்
உயரமும் கேட்டது
மற்றும் ஏதாவது மச்சமோ
தழும்போ என்றும் கேட்டது

ஐயா, ஆகாது கதை என்று
அன்றிரவே ஒரு வழி செய்தோம்
அடுத்ததெரு அம்மனை
'அபேஸ்' செய்து வந்து
நட்டுவிட்டோம்
ஆருக்குத் தெரியப் போகிறது
அம்மன் மாறாட்டம்?

நடை பாதை அம்மன் என்பதால்
நடைமுறையில் ஒரு சவுகரியம்
திருட்டுக் கொடுக்கலாம்
திருடவும் செய்யலாம்
நாகத்தலைதான் முக்கியம்
ஆறாவது வெள்ளியன்று
கூடுதலாய் ஒரு பிரார்த்தனை,
நடப்பவர்களை மட்டுமல்ல
நடப்பட்டவைகளையும் சேர்த்துக்காக்க.

## அந்த நிலவு

அந்த நிலவு
அவ்வளவு அருகில் இருந்தது
ஒரே தாவல்
அதன் நட்சத்திரக் கிளையிலிருந்து
அதை உலுப்பிவிடும்
என எண்ணினேன்.
அப்படி நான் நம்பினேன் என
என்னால் நம்பவே முடியவில்லை.

முன்றில் 19 / 29

அந்த ஒற்றைத் தனிப் பறவை
கரிய பாழ்வெளியே பாடி
இலையுதிர் காலப் புல்லை
இன்பமாகப் பொசுக்குகிறது.

இந்தக் கற்பனை என்னைத்
தலைகுனியச் செய்கிறது
நடைமுறையில் கிடைக்காத பறவையது
கிடைக்கும் எனநம்பினேன் என்று
என்னால நம்ப முடியவில்லை.

ஆப்பிள் பழம்போல
அமைதியாகவும் உறுதியாகவும்
நான் விரும்பியதை எல்லாம்
நீ செய்து வந்தாய்
அது உண்மை என்று
எப்படித்தான் நான்
எண்ணியிருக்க முடியும் ?

## அவன் மனம் கல்

அவன் மனம் கல்
அவன் இதயம் கல்.
இது சாவு
இது ஒரு முடிவு.

திடீர் என
மையிருட்டிலிருந்து
மறக்க முடியாத
ஒரு பறவை.

ஏரி நீளம் முழுதும்
விரிந்து பறக்கிறது.

எரிகின்ற வெள்ளியின்
வடுவுக்குப் பின் வடுவாக
அலகு பிளந்து
கரகரத்த குரலில்
கள்ளமிலாது
கரைகிறது.

www.padippakam.com

# ஒரு பாடல் (3)

உச்சிக் கிளைகளிலிருந்து
நான் பார்த்தவை எவ்வளவோ
அவற்றை எல்லாம்
என்னால் சொல்லமுடியாது
தித்திரிப் பறவையின்
தொண்டையளவு
நான் இருந்தபோது
நான் கேட்டதை எல்லாம்
என்னால் ஒருபோதும் சொல்லமுடியாது.
ஒளிரும்
ஒரு பாறையிலிருந்து
இன்னொரு பாறைக்குத்
துள்ளும் தண்ணீரில்
நான் தாவியபோது
என் கால்களும் கைகளும்
ஒரு கதகதப்பை உணர்ந்தன.
அதைப்பற்றி என்னால் சொல்லமுடியாது.
பாறையின் நடுவில்
புல்லின் நெஞ்சில
நிழல்கள் எல்லாம் கடுநீலமாக இருக்க
காற்றுடன் விளையாடியபோது
நான் பேசாதிருந்தேன்
அதை
இவ்வார்த்தைகள் என்னதான்
செய்துவிடும்
என்னிடம் ஒன்றும் இல்லை
நான் ஒன்றுமே இல்லை,
என்று நான் சொன்னால் ஒழிய
எனக்கு உண்மையான சாந்தி கிடையாது.
உயர்ந்த
வெப்பம் மிக்க
பாறைகளில்
மெதுவாக
அமைதியாக
காற்றொன்று
என்னைத்
தகர்க்கிறது.

**மூலம் : ஆண்ட்ரு ஹார்வி**
**ஆங்கிலம் வழி தமிழில் : மே.சு. இராமசுவாமி**

முன்றில் 19 / 31

படிப்பகம்

# முன்றில் செய்திகள் / சிறப்பு

## திருவாதவூரரும் திருகோணமலை ஒபிரியனும்

திருவாதவூரராகிய மணிவாசகர் ஆனி மாதம் மக நட்சத்திரத்தில் பிறந்ததாகச் சொல்வார்கள். (எனக்குத் தெரியாது) அந்த மக நட்சத்திரத்திற்கு இப்போது அட்டமத்துச் சனி ஆரம்பிக்கிறது என்பது மட்டும் உண்மையாகயிருக்கும். பிரமிள் அதை ஆரம்பித்து வைத்துள்ளார் என்றும் சொல்லலாம். மக நட்சத்திரக்காரர்கள் பயப்பட வேண்டாம். சனி ஒன்றும் செய்து விடாது.

* * *

ஞானிகள் உலகிற்குச் சொந்தமானவர்கள். பேதமற்றவர்கள். ஒரு நாட்டு ஞானி இன்னொரு நாட்டிற்குச் சென்றார் என்று சொல்வதிலும் உண்மையுண்டு. சீன நாட்டைச் சார்ந்தவர்தாம் போகர் என்பர். காஞ்சிபுரத்து அறவாணர்தாம் சீனா சென்ற தர்மபாலர் என்பது சீனர்களே ஒப்புக்கொள்ளும் விஷயம். ஏசுபிரானே காஷ்மீர் வந்து அங்கேதான் கடைசிக் காலத்தைக் கழித்ததாகக் கூறுவார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக "யாதானும் நாடாமல் ஊராமல்" என்கிறான் வள்ளுவன் என்னும் ஞானி.

ஆனால் அட்டமத்துச் சனி மாணிக்கவாசகரை அவ்வாறெல்லாம் எளிதில் விட்டு விடவில்லை. அவருக்கு ஞான உபதேசம் அளித்தது, குதிரை மேல் வந்த அரேபிய நாட்டு சூஃபி என்று சொல்லவைத்து விட்டது. நரி சம்பந்தமான விஷயமானதால் ஊளை அதிகமாகவே இருக்கிறது.

குதிரை வியாபாரிகளாக அன்று நிலவியவர்கள் அராபியர்கள்தாம் என்கிறார். அதாவது மாணிக்கவாசகர் காலத்தில். அது எந்தக்காலம் என்பதில் கருத்து வேறுபாடு இருப்பது எல்லாரும் அறிந்த விஷயம். சங்க காலத்தில் இருந்தவர்தான் இந்த மாணிக்கவாசகர் என்று யாரும் சொன்னதில்லை. சங்க காலத்திற்கும் முன்னரே, வேத காலத்திற்கும் முன்பே, குதிரைகளைக் கொண்டு வந்தவர் ஆரியர்.

பூர்வ குடியினருக்கு குதிரையை அறிமுகம் செய்து வைத்ததும் அவர்கள்தாம். Jan Myrdal என்ற ஸ்வீடன் நாட்டு ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்.

"When the invading tribes, with their horse drawn chariots ... occupied their new land, a line was drawn between free man and slave, between Aryan and Sudra".

எத்தனையோ வரலாற்று அறிஞர்கள் வேண்டிய மட்டும் சொன்ன சங்கதி இது. மேற்படி சுவீடன் ஆசிரியரைக் குறிப்பிட்டது அவரது India waits என்ற புத்தகத்திலிருந்து சில வாசகங்களையும், கருத்துக்களையும் பரிபூரணமாகிய பிரமிள் தனது கட்டுரைகளில் பயன்படுத்தி இருக்கிறார் என்ற காரணத்தால்தான்.

அசுவபாலர்கள் உண்டு. சல்லியன் நளன், கிருஷ்ணன், நகுலன் போன்ற சத்ரியர்களுக்கு குறைவில்லை. அசுவ மேதம் உண்டு. இங்கே குதிரைகளைப் பற்றிய கதைகள் பகை வீரர்களின் குதிரைகளை எண்ணிப்பார்த்து மகிழ்ந்த குழந்தைகளைப் பற்றி யெழுதிய கபிலர் — எல்லாவற்றையும்விட விஷ்ணுவின் கடைசி அவதாரம் இவையெல்லாம் உண்டு.

"நீரின் வந்த நெடுநிமிர் புரவி" பற்றி உருத்திரங்கண்ணனார் சொல்கிறார். அது பூம்புகார் துறைமுகத்தில் - மணிவாசகர் காலத்திற்கு முன்பே. பூம்புகாரில் வந்து இறங்குவதென்றால் புறப்பட்ட இடம் அரேபியாவாகவா இருக்கும்? கங்கைக் கரையிலிருந்து வராதா? (பரிபூரணத்தின் வரலாற்று ஞானத்தோடு பூகோள அறிவையும் எண்ணி சீடக்குஞ்சுகள் ஆர்ப்பரிக்கலாம்) மணிவாசகர் கதையை எழுதிய பரஞ்சோதி முனிவர் ஐம்பத்தாறு தேசங்களையும் குறிப்பிடுகிறார். சீனமும், யவனமும், சிங்களமும் இதிலடங்கும். யவனம் என்பது (சங்க காலத்திலேயே) கிரேக்க நாட்டை மாத்திரம் குறிப்பதல்ல - பொதுவாக மேல்நாடுகளைப் பற்றியது. அரேபியா என்ற பெயர் பின்னர் வந்தது. அந்த செமிட்டிக் மக்களும் ஆரியர்கள்தாம் என்பது வையாபுரி பிள்ளை உட்பட எல்லாரும் சொல்கிற விஷயம். எனவே மணிவாசகர் காலத்திற்கு முன்பே குதிரையும், குதிரை வீரர்களும் குதிரைப் பாகனும் சேவகனும் இங்கேயே உள்ளனர். கழுதை பூட்டியத் தேரையா பாரி மன்னன் முல்லைக்கு ஈந்தான்? புத்தி போகிறதே.

சோழநாடு செல்லும் வழியில் திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார் கோவிலில் மணிவாசகர் ஒருவரை சந்தித்திருக்கிறார். அவர் என்ன உபதேசம் பெற்றார் என்று தெரியாது. ஐந்தெழுத்தை ஓதிவிடுதல் என்பது சாதாரணமாகச் சொல்லும் சங்கதி. "பேச்சிறந்த மாசில் மணியின் மணிவார்த்தை" என்கிறார் அவர். திருப்பெருந்துறையில் அவர் பெற்றதாகச் சொல்வது யாவுமே இந்த ரீதியில்தான்.

"நீ கண்டு கொள் என்று காட்டிய"

"மெய்யனாய் வெளி காட்டி"

"வெளியே என்முன் நின்றதோர்"

"காதல் பெருக கருணை காட்டி"

"வெளிப்படுத்த அருளறிவார்"

இந்த "வெளி" என்னும் வார்த்தை பாண்டி நாட்டில் (இன்னமும் வழக்கிலுள்ள வகையில்) புதிதாக எதையும் கண்டு கொள்வது என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. ஒன்றும் தெரியாதவனை "மண்டையில் வெளி இல்லாத பயல்" என்று பெரியவர்கள் சொல்வதை அங்கே (நாஞ்சில் நாடு உட்பட) கேட்கலாம். உபதேசம் பேச்சால் வெளிப்படவில்லை. மணிவாசகரே கண்டு கொண்டார். அவர் கண்டது ஒரு சித்தராயிருக்கக்கூடும். அவரை மௌனகுரு என்பார்கள். ஆவுடையார் கோவில் பிரகாரத்தில் அந்த மௌன குருவிற்கு ஒரு சந்நிதியும் உண்டு. அதற்கு தீபராதனை இல்லையென நினைக்கிறேன். தமிழ்ச் சித்தன் சூத்ரன் அல்லவா?

"வெளியாகக் காட்டிய என் மெய் உறவாம் பொருளே" என்று அருள்விளக்க மாலையில் வள்ளலார் சொன்னதையும் எண்ண வேண்டும்.

மணிவாசகரை பெருந்துறைப்பிள்ளை என்றழைத்த பட்டினத்தார் (சைவப்பிள்ளைகள் கவனிக்க) "பேசாமல் பேசினோமே" என்கிறார். இந்த பட்டினத்தார் பூம்புகாரைச் சார்ந்தவர். இவரிடமும் ஒரு சித்தன் பேசாமல் பேசியுள்ளான். மருதப்பன் என்ற சித்தன். திருவிடைமருதூரில் கண்டிருக்க வேண்டும். வளர்ப்புப்பிள்ளை என்ற கதையையெல்லாம் தள்ளி விட்டுப் பார்த்தால், அந்தச் சித்தன் பட்டினத்தாருக்குக் காட்டிய

மண்ணையும் சாணிவரட்டியையும் புரிந்து கொள்ளலாம். காதற்ற ஊசி என்ற பட்டினத்தாரின் சொற்றொடர் கிட்டத்தட்ட உலகின் எல்லா மொழிகளிலும் உண்டு. திருவிடைமருதூர் சித்தனையும் திருப்பெருந்துறைச் சித்தனையும் சிவனாகவே ஆக்கிவிட்டார்கள்.

ஞானம் ஒருவன் பெற்ற கல்வி அல்ல. "வெளி" ஏற்பட கல்வி உதவி செய்யலாம் — செய்யும் என்று உறுதி கூற முடியாது. தோன்றுவது ஞானம். அதைக் கண்டவரும் கொண்டவரும் ஞானிகள். மனத்துக்கண் மாசு நிறைய கல்வியே காரணமாக இருப்பதும் கண்கூடு. "பண்ணேன் உனக்கொரு பூசை நான்" என்று தாயுமானவர் சொன்னது காட்சியில் அடைந்த ஞானம். "அது நம்மை வந்தடையாமலிருக்கலாம். ஆனால் நாம் செய்யக்கூடியதெல்லாம் அதை வரவேற்க கதவுகளைத் திறந்து வைத்திருப்பதுதான்" என்றவாறு கூறுகிறார் ஜே.கே.

அரேபியருக்கும் குதிரைக்கும் உள்ள சம்பந்தம் தெரிந்தவொன்று. கொல்லன் தெருவில் ஊசி விற்பது போல என்ற பழமொழியை நினைவுபடுத்தும் வகையில் "ஓர் அரேபியனிடமா குதிரைபற்றிப் பேசுகிறாய்" என்று மேநாட்டில் சொலவடையுண்டு.

தமிழகத்து முஸ்லீம்களும் இம்மண்ணின் பண்போடு ஒன்றைச் சொல்கிறார்கள். சேரமான் பெருமாள் நாயனார் தன்னிடம் சொல்லாமற் பிரிந்த சுந்தரமூர்த்தி நாயனாரைத் தொடர்ந்து குதிரையில் ஏறிச்சென்றவர் நேராக அரேபியாவுக்கு போய்விட்டார் என்று நம் கடலோர முஸ்லீம்கள் இடையே கதை உண்டு. சுந்தரர் கைலை சென்றார் என்று சொல்லும்போது, இதையும் நினைத்துக் கொள்ளலாம்.

ஆனால் கைலை என்று சொல்வது இப்போது இமய மலையில் இருக்கும் சிகரம் அல்ல என்பது போன்றவற்றை தெரிந்தால் அல்லாமல் பிரமிள் கூட்டம் தமிழ்ச் சித்தாந்தத்தைத் தொட்டுவிட முடியாது.

மோசஸ் கண்ட ஒளியும் ஆப்ரகாம் கண்ட மூன்று உருவங்களும், மூன்று கற்களை கட்டிக் கண்ணீர் வடித்த பைபிள் நாயகர்களும் தமிழகத்திலிருந்து சென்றவர் என்றும் சொல்ல முடியும். சிலுவைக்கும் இலிங்கத்திற்கும் உள்ள உருவ ஒற்றுமை பற்றிக் கூற முடியும். "நஞ்சு உண்டு அமைவர்" என்ற குறள் வரிகள்

சாக்ரடீசைச் சுட்டுகின்றன என்றும் கூறலாம். "ஒன்று எய்தி நூறு இழப்பர்" என்ற வரிகள் கௌரவ - பாண்டவர்களைச் சுட்ட முடியாதா?

முடியும். இந்திய மாக்கடலும் ஆப்ரிக்கா வரை நிலமாக இருந்து கடல்கோளால் சென்றதும் நம்பக்கூடியதுதான். ஆனால் எந்த நிலையிலும் ஆரியர் என்ற இன மக்கள் தமிழ் நாட்டிலிருந்துதான் சென்றனர் என்று சொல்ல முடியாது. சிவப்பிந்தியரிடையே சொல்லப்படும் வைத்தியன் ஒரு வகையில் சித்தன்தான். எழுத்தே இல்லாத பேச்சு மட்டும் உள்ள அவர்களது மொழிப்படம் ஒன்றை சமீபத்தில் பார்க்க நேர்ந்தது. அந்த வைத்தியன் மலையுச்சியைப் பற்றியும் சாவின் பின்னர் திரும்பி வருவது பற்றியும் சொல்வது, நமது பட்டினத்தாரை நினைவூட்டிற்று. அதற்காக பூம்புகார் நகரத்தார் அமெரிக்க சிவப்பிந்தியர் என்று சொல்வது தமிழை உயர்த்தி விடாது. குதிரையில் வந்தவன் அரேபியன் - கழுதையில் சென்றவனெல்லாம் யூதன் என்று கணிக்கவா வரலாறும் அகழ்வாராய்ச்சியும் விஞ்ஞானமும் இருக்கின்றன? கபால பைரவர் ஏறி வருவது என்னவென்று பிரமிள் சொன்னால் சரியாகவிருக்கும்.

இந்த ஞானோதயம் ஏன் ஏற்பட்டது என்பதற்கு காரணம் சொல்ல முடியும். தன்னைக் காப்பாற்றிக்கொள்ள பிரமிள் செய்யும் ஓர் இலக்கியச் சப்பைக்கட்டு. ஏற்கெனவே முன்றிலில் கூறியிருந்தபடி பிராமணருக்கும் சாதி இந்துக்களுக்கும் ரிஷிகளின் கோத்ரம் பொதுவானவை என்ற இவரது கூற்று பலரையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. பிராமணன் என்பவன் ரிஷிகளின் சந்ததியில் வந்தவன் - தன்னை அவ்வாறு சொல்லிக்கொள்வதில் பெருமை அடைபவன். சாதி இந்துக்கள் என்று சொல்லப் படுவோர் அதாவது பெரியார், அண்ணா, காமராசர், பசும்பொன் தேவர், பாரதிதாசன் ஆகியோர் மட்டுமல்ல. யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் செல்வநாயகம் ஆகியோரெல்லாம் கூட பிராமணர் சந்ததியினர் என்று பிரமிள் கூறுவதை கொச்சையாகச் சொல்லப்போனால் பிராமணனுக்குப் பிறந்தவன் என்று ஆகிறது. இப்படிச் சொல்லிவிட்டு இந்த இக்கட்டிலிருந்து தப்பிக்க இவர் கொண்டு வந்த ஞானோதயம்தான் வாதவூரருக்கு சூஃபி ஞானோபதேசம் செய்தார் - வாதவூரர் அரேபியா போனார்

என்பது. ஒரு வாதத்திற்காக ஒப்புக்கொண்டாலும் அரேபியா சென்று விட்டால், அரேபியன் ஆகிவிட முடியுமா? இங்குள்ள முஸ்லீம்களையே அவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாதே. தமிழ் ஞானம் வடநாட்டிற்கும் வடநாட்டுத் தத்துவம் இங்கும் பரிவர்த்தனையாவது சகஜம். அதனால் தமிழர்களின் வம்சாவழி மாறிவிடுமா? இங்குள்ள சித்தர் சீனா சென்றால் அவரை மங்கோலிய இனம் என்று சொல்வாரா? சாதி இந்துக்கள் என்று சொல்லப்படுவோருக்கு எவ்வாறு பிராமணருக்கான கோத்திரம் வரும்? ஒரு தத்துவம் சென்றிருக்கலாம். அப்படி தத்துவத்தை மேற்கொண்டால் அப்படிப்பட்டவர் மேற்படி தத்துவவாதிக்குப் பிறந்தவன் என்றா சொல்வது? பிரமிள் எந்த ரிஷியின் சந்ததி? ரிஷிகள் உலக இனங்கள் எல்லாவற்றிலும் உண்டு. மரீச கோத்திரத்தில் பிறந்த தமிழன் என்று யாராவது இருக்க முடியுமா? சீரடி சாயிபாபாவை குருவாக ஏற்றுக்கொள்கிறவன் அவரது சந்ததியில் உதித்தவன் என்று சொல்லி விடுவதா? சிவ ஆகமங்கள் வடமொழியில் உள்ளன. அவற்றில் மனதை பறிகொடுத்த யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரை ஆங்கிரச முனிவரின் சந்ததி என்பதா? ஒருவரை குருவாகக் கொள்வது வேறு விஷயம். குருவை மாற்றிக்கொள்ளலாம். பிராமணர் அப்படியல்ல. அவர்கள் சந்ததியில் வந்தவர்கள். ஏற்றுக்கொண்டாலும் கொள்ளா விட்டாலும் அதே கோத்திரம்தான். அப்படியென்றால் ஆறுமுக நாவலர் போன்றோர் தங்கள் மூல புருஷராக ரிஷிகளை எப்படிச் சொல்ல முடியும்? தமிழரை இந்தோ ஆரியர் என்று எந்த வரலாறாவது சொல்லுமா? இது எல்லாம் அத்யாத்மிகப் பார்வையில் தெரிந்த விஷயம் என்று முற்றுப்புள்ளி வைத்தால் விட்டுவிட முடியாது. தங்களது தற்போதைய கஷ்டங்கள் நீங்கியவுடன் ஈழத் தமிழரும் இதுபற்றி கேட்பார்கள் என்று நினைக்கிறேன்.

தமிழ் ரிஷிகளைப் பற்றியெல்லாம் பேச அவசரமாக திட்டம் தீட்டி அதை ஆரம்பித்திருப்பதின் ரகசியம் இதுதான். பத்திரகிரியாரிடம் பிரமிள் இதைச் சொன்னால், தனது திருவோட்டை வேறு எதன் மீதும் எறிந்திருக்கமாட்டார்.

நரி - பரி என்று மாணிக்கவாசகர் காலத்திற்கு முன்பும் இருந்திருக்க வேண்டும். அதை ஓர் அழகான கதையாக பிற்காலத்தோர் மாற்றியிருக்கின்றனர். "நரியைப் பரியாய்

செய்வானும்” என்று நாவுக்கரசர் சொன்னது மாணிக்கவாசகர் வரலாறு குறித்து அல்ல. எப்போதுமே பொருந்தக்கூடியதுதான்.

லகோவாரி போன்ற ஆய்வாளர்களைக் குறிப்பிட்டிருப்பது ஒரு வெத்துவெட்டு. அவரது புத்தகமான Dravidians and the west பெரும்பாலும் ஒரு தொகுப்பு நூலே. ஏற்கெனவே பலரால் ஆய்வு செய்யப்பட்ட சில கொள்கைகளுக்கு விவரங்களைத் தொகுத்தளித்திருக்கிறார். இப்புத்தகத்திற்கு முன்னுரை அளித்த கே. என். நீலகண்ட சாஸ்திரி கூட லகோவாரியை முழுதும் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழகத்து மொழியியலாளர் திரு ச. அகத்திலிங்கம் அவர்களை விட இவரைச் சொல்வதற்குப் பெரிதாக ஒன்றுமில்லை.

தமிழ் நாட்டில் இலாயம் என்ற பெயரில் இரண்டொரு ஊர்கள் உண்டு. நாஞ்சில் நாட்டில் ஆரல்வாய்மொழிக்குப் பக்கத்திலும் ஒரு ஊர் உண்டு - இலாயம் என்று.

(இந்த ஆரலில் பிரமிள் சில காலம் தங்கியிருக்கிறார். அங்கெல்லாம் தன்னை சைவப்பிள்ளை என்றுதான் அங்குள்ளவர்களிடம் குறிப்பாக சைவாள் காப்பி கிளப் சுப்பையா பிள்ளை போன்றவர்களிடம், அறிமுகம் செய்து கொண்டுள்ளார். சைவ வேளாளர் என்பதில் ஓர் அலாதி பரிவு உண்டு என்பது தெரிகிறது. இப்போது இணையற்ற கவிஞர் என்று பிரமிளால் பரிந்துரை செய்யப்படுபவரும் ஒரு சைவ வேளாளர் என்பது தெரிகிறது.)

திருபுடைமருதூர் என்ற ஊரில் (திருவிடைமருதூர் அல்ல) குதிரைகளை நிறுத்தும் இடத்தைக்கொண்ட பெரிய கோவில் உள்ளது. பலவகைப்பட்ட குதிரைகளைப் பற்றிய ஓவியங்களும் உண்டு. இவ்விடங்களில் பணியாற்றியவர்களை பின்னாளில் பிராமண நீதியைக் கொண்டு ஆட்சி நடத்திய மன்னர்கள் ‘கீழ்ச்சாதி’ என்று அறிவித்தபடியால், அவர்கள் முஸ்லீம்களாக மாறியிருக்க வேண்டும். தமிழ் முஸ்லீம் சகோதரரிடையே சித்தர்கள் உண்டு. ராமதேவர் என்ற சித்தர் முஸ்லீம் மதத்தைச் சார்ந்தவர் என்றே குறிப்பிடப்படுகிறார். குதிரைப்பாகன் கீழ்ச்சாதி என்று அறியப்படுவன்.

தமிழ்ச் சித்தாந்தத்தின் ஐயப்பாடுகளை அறிய ஷேக் தம்பி என்ற செய்கு தம்பிப் பாவலரிடமும் தமிழ் இசையின் கூறுகளைப் பற்றியறிய ஆப்ரகாம் பண்டிதரிடமும் சென்றவர்தாம் அதிகம்.

தமிழ் கூறும் சிவனும் ஒரு சித்தன்தான். அவன் நிலந்தரு திருவிற் பாண்டியன் என்று அறியப்படுபவன். ஏதோ ஒரு கடல் அரிப்பின்போது நிலமிழந்த மக்களுக்கு நிலத்தை பங்கிட்டு அளித்த வேடர் தலைவனாக இருக்க வேண்டும். பாம்புக்கடி வைத்தியத்தில் சிறந்திருக்க வேண்டும். நெருப்பின் பயனைப் புதிதாக தெரிந்து சொன்னவனாகவும் இருக்ககூடும். வைதிக வாதியான ஆதி சங்கரர் கூட உண்மையைப் புறக்கணிக்க முடியாது சிவனுக்கு இந்த உருவத்தையே அளிக்கிறார். நப்பின்னையின் காதலன் - மாட்டுச்சண்டை வீரன் கண்ணனை காசியபக் கோத்திரத்து விஷ்ணு என்று ஆக்கி விட்டாலும் கூட தமிழ்ச் சித்தனாகிய சிவனை ஒன்றும் செய்ய முடியவில்லை.

மணிவாசகரே இதுபற்றிக் கூறுகிறார்.

காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிப்பாகன்

இந்த வரிகளோடு பட்டினத்தாருக்கு மருதப்பன் அளித்த மண்ணையும் சாணி வரட்டியையும் சேர்த்துக் கொண்டால் சிவனது சித்தமும், சித்தரின் சிவமும் தெரிந்துவிடும். பழந்தமிழர் கூறும் நாநில மக்கள் அவர்கள்.

பூசனை என்பது தமிழில் அலங்கரித்தல் என்ற பொருளில் வந்திருக்கிறது. என்னுடைய முப்பாட்டன் தோப்பிக்கள்ளோடு ஆட்டைப் பலிகொடுத்து நடு கல்லை வணங்கினான் என்பதில் எந்தச் சிறுமையும் எனக்கில்லை.

நடுகல் அலங்கரிக்கப்பட்டது போல் மன்னனும் பின்னாளில் அலங்கரிக்கப்பட்டு போற்றப்பட்டதுதான் பூசனைக்கும் சிறப்பு என்று அறியப்படும் விழாவிற்கும் மூலம். இன்னும் கிராமப் புறங்களில் பூசனையும், சிறப்பும் தனித்தனியாகவே சொல்லப்படும். "சிறப்போடு பூசனை" என்ற குறள் வரிகளை நினைவு கூரலாம். இந்த மாற்றத்திற்கு முக்கிய காரணமாக ஆதிசைவர் என்ற மருதநில மக்களைச் சொல்ல வேண்டும். அறிவர் என்ற சித்தர் மரபிலிருந்து அவர்கள் சிறிது மாறுபட்டாலும், நிலத்தால் நிலைபெற்றுவிட்ட வாழ்க்கை முறையால் பூசனை மரபு ஏற்பட்டதே தவிர ஆரிய நெறிமுறைகளை பின்பற்றியதால் அல்ல. ஆதிசைவர் ஆரியர் அல்லர். மணிவாசகர் ஆதிசைவரே. அந்தணர்

என்றழைக்கப்படுபவரும் அவர்கள்தாம். திருவாசகம் பாடிய மணிவாசகன் பெயரை சிவனை வழிபடும் பிராமணர் சூட்டிக்கொள்ள மறுப்பதன் காரணம் இதுதான்.

தம் மூதாதையர் கடவுளாகிய முருகனை தங்களது உயர்வு மனப்பான்மை காரணமாக முருகவேள் என்று மாற்றினாலும், அந்த முருகவேள், சுப பிராமணனாக (சுப்ரமணியன்) குறிக்கப்பட்டது அரசு ஆணை மூலம் பிராமண நெறி நடத்திய காரியம். அரசரைப்போலவே ஆதிசைவரும் ஆரியப் பெண்களை மணந்து தோன்றியவரே தென்னாட்டுப் பிராமணர்கள். இல்லையென்றால் முருகவேளுக்கு பூணூல் போட எந்த சாத்திரமும் அனுமதித்திருக்காது. தென்னாடு கண்ட சிவனுக்கும் சேயோனுக்கும் பூணூல் உண்டு என்பது எத்தனை நகைப்பிற்குரிய விஷயம்! யக்ஞோபிய உபன்யாசம் அருளும் பிரமிளைத் தவிர யாரும் இதில் மகிழ்ந்திருக்க முடியாது. பூசனை, பூசாரி என்றெல்லாம் அறியாது பேசும் சிறுவர்களை விட்டு விடலாம். சிவனுக்கு மாலை போடுவதும் பாப்லோ நெருடாவிற்குப் போடுவதும் ஒன்றுதான். தமிழ்க் கவிதையும் சிவன் எழுதியிருக்கக் கூடும். அவன் காளை மாட்டின் மேல் உட்கார்ந்து இமயமலையில் தரிசனம் அளிக்கவில்லை.

முல்லை நில மக்களைவிட தாங்கள் சிறந்தவர்கள் என்ற செருக்கை அம்பலமாக்கிக் கொண்ட நிலவுடமைக்காரரின் அன்றைய வெளிப்பாடு அது. சிவன் என் முப்பாட்டனின் மூதாதையரின் தலைவன் அவ்வளவுதான்.

க.நா.சு. ஒரு தடவை எழுதியிருந்தார் — மாணிக்கவாசகர் தென்னாடு உடைய சிவனே என்று சொல்லும்போது, தான் வட நாட்டு சிவனைப் பார்க்க முடியவில்லையே என்ற ஆதங்கம் தெரிகிறது என்று. தென்னாடு என்பது திசையை குறிக்கவில்லை என்று அவரிடம் விளக்கியதும் அவர் மூர்க்கத்தனம் அடையாது, இதைப்பற்றி எழுதலாமே என்றுதான் சொன்னார். தினமணியில் இதைப்பற்றி - க.நா.சு. சொன்னதையும் அதற்கான மறுப்பையும் நான் ஏற்கெனவே எழுதியிருக்கிறேன்.

சிவன் - விஷ்ணு - நாராயணன் ஆகிய பெயர்கள் தமிழ்தான் என்றாலும் வேர்ச் சொற்களை மட்டும் கொண்டு எடுத்த முடிபு அல்ல. எடுத்துக்காட்டாக 'ந' என்றால் நீர். அரா

என்பது பாம்பைக் குறிக்கும். இவ்வாறு ஏற்பட்டதுவே பாம்பின் மீது தண்ணீரில் பள்ளிகொண்ட நாராயணன் என்ற பெயர்க் காரணம் என்று சொன்னாலும் அது மட்டுமே போதுமானதாகி விடாது. ஒருவேளை தென்னாட்டில் பாம்பு என்ற ஜந்துவே இல்லாமலிருந்து விட்டால், இந்தப் பெயர்க்காரணம் பொருளற்றதாகிவிடுகிறது. சொற்களோடு நில இயல்பையும் மொழியியலாளர் கணக்கெடுக்கின்றனர். பாம்பு வணக்கம் ஆரியர்க்கு இல்லையென்பதோடு, நர்மதை நதிக்கு தெற்கே வாழ்பவர் நாகர்கள் அவர்களோடு எந்த சம்பந்தமும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று சொல்கிற பிரம்மாணங்களும் வடமொழியில் உண்டு. இந்த ஆதாரமும் எடுத்துக் கொள்ளப்பட்டால்தான் ஆய்வு பூரணமாகிறது. வேர்ச்சொல் முக்கியமானது. அது ஒன்று மாத்திரமே போதுமானதல்ல என்பதை பிரமிள் அறிந்திருக்க வேண்டும் (பார்க்க ச. அகத்தியலிங்கத்தின் உலக மொழிகள்).

தமிழின் உயர்வு, தனித்துவம், ஆரியம் எல்லாமே ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக பிரமிள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பது எழுத்தாளர் யாவரும் அறிந்த விஷயம். கைபர் கணவாய் வழியாக வந்தவர்கள் பற்றி இவர் கவிதை எழுதுவதற்கு ஒரு காரணம் இருக்கும். தமிழ் ரிஷிகளும் ஆரிய ரிஷிகளும் ஒன்றுதான் என்று இப்போது சொல்வதற்கும் காரணம் என்னவென்று தெரிந்துகொள்ள முடிகிறது. அந்தப் பருப்பு எல்லாம் இங்கே வேகாது என்று அறிந்து கொண்டால் சரி.

* * *

மணிவாசகர், பட்டினத்தார் போன்றவரைப் பற்றி யெல்லாம் மகிழ்ச்சியோடு எழுதும்போது, கபால பைரவன் பற்றியும் சொல்லத் தான் வேண்டி வருகிறது. மூர்க்கத் தனத்தை எதிர்ப்பது முரட்டுத்தனம் ஆகாது.

சக எழுத்தாளனை 'அடா' என்று எழுதுகிறாயே இது அடுக்குமா என்றால் அவ்வையாரே சொல்லியிருக்கிறாள் நானும் சொல்லுவேன் என்கிறது. காவேரி கரைபுரண்டு ஓடினாலும் சில ஜந்துக்கள் நக்கித்தான் குடிக்க வேண்டும். அவ்வையார், இது

www.padippakam.com

மட்டுந்தான் சொல்லியிருக்கிறாளா? அவ்வை சொன்னால் தவ்வையுமா சொல்வது? "உன்னையும் பெத்துப் போட்டாளே ஒருத்தி" என்றும் அவ்வை சொல்லியிருக்கிறாள். அதைச் சொல்லலாமா - அது மட்டுமா - அட எமனேறும் பரியே.

இதிலே ஒரு குட்டி பதினாறு அடி பாய்கிறது. தற்காலிக வேலை மட்டும் இல்லாவிட்டால் சாணி அள்ளக்கூட லாயக்கில்லாத பாஸ்வல். "பாருங்கோன்னா சாணி எடுத்து எறிகிறார்" என்று ஜாண்சனிடம் புகார் செய்ய அவர் அபயம் தருகிறார். வேண்டாமா என்ன K is paying the rent (இது பிரமிளின் வாசகம்) மாரடிப்பு நன்றாகவே செய்யப்பட்டிருக்கிறது சாணி சுத்தம் செய்யும் பொருள் என்பதாகச் சொல்வார்கள். நரகல் மீதா எறிவார்கள்? மேலும் இம்மாதிரி வார்த்தைகளை சாணி எறிதல், உளறல், பைத்தியம் போன்றவற்றை இந்த சன்மங்கள் எப்படி வாய் கூசாது சொல்ல முடிகிறது - நெஞ்சு குறுகுறுத்திருக்க வேண்டுமே. முன்றில் வாசலில் காத்திருந்து, அங்கு வந்து போகும் வங்கி அலுவலர்களை பின் தொடர்ந்து நன்கொடை கேட்டவர்கள்தாம் இருவரும். பிரமிளைப் பொறுத்தவரை உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும் நன்கொடை கிடைத்திட உதவியவர்கள் யாவரும் ஞானக்கூத்தனை விட பெரிய கவிஞர்கள். லயம் ஆசிரியர் விஷயம் வேறு. "அய்யய்யோ - எனக்கொண்ணும் தெரியாதுங்க கேள்வியும் அவரே பதிலும் அவரே" என்று தனது கையறு நிலையை விளக்கி நன்கொடை வசூலை திரும்பவும் ஆரம்பித்தார்.

இன்னொரு சீடர் பாய்கிற பாய்ச்சலில் காலே தரையில் பரவவில்லை. பத்தாம் கிளாஸ் கைடு இது. கைடு புத்தகத்திலுள்ளதை எல்லாம் போட்டு டிக்கன்ஸ் ஆராய்ச்சி பண்ணி நியூயார்க் டைம்ஸ் பத்திரிகைக்கு கட்டுரை அனுப்பி வைக்கும்பேறு பெற்ற கடைக்குட்டிச் சீடர். தலைவர் வருகிறார் என்றதும் நாலுகால் பாய்ச்சல். கைக்கிளை நயத்துடன் வர்ணனை. காட்சி, ஐயம், தெளிதல், தேறல் எல்லாமே தண்ணீர் பட்டபாடு. "வாயைத் திறந்தால் குரல் கேட்கிறது - வாயின் மேலே மூக்கு - அய்யோ அதன் மேலே கண் தெரிகிறது. மேலும் நெற்றி இருக்கிறது. என்ன பேறு பெற்றேன். ஐயனே எனக்கு உபதேசியுங்கள் தங்களைக் கண்ட என் கண்கள் இனி யாரையும்



படிப்பகம்

www.padippakam.com

பார்ப்பதை நிறுத்திக் கொள்ளட்டும்" என்று அரற்றவும் கபால பைரவன் தனது கையை உயர்த்தி காலைத் தடவி காதைப் பிடித்திழுத்து செய்த உபதேச மந்திரம் "பெக் – புக்".

"பூஜ்யரே – கிருஷ்ணரும் அர்ஜுனரும் வேறு ஒரு மந்திரம் சொல்கிறார்களே "சபேஸ்டிய நைஷ்டி" என்று. வேறு வகையில் கபாடபுர மந்திரத்தை இளங்கோ ஏற்கனவே கூறி விட்டாரே".

"அதிகப் பிரசங்கி – அவர்கள் துவிஞர்கள் அல்லர் – சத்திரியரோ சூத்திரரோ – நான் அறியாதவரை "சபேஸ்டிய நைஷ்டி மந்திரம் என்று எதுவும் இருக்க முடியாது – நீ முன்றிலைச் சாடு – என்னை சுந்தரத் தமிழால் பாடு" என்றதும், சிரமேற்கொண்டு 'பித்தா' என்று மனமுருகிப் பாடுகிறது கடைக்குட்டி.

* * *

கடவுள் மாமுனிவர் எழுதிய திருவாதவூரடிகள் புராணமும் சரி பெரும்புற்றபுலியூர் நம்பி எழுதிய திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணமும் சரி, அவை இறைவனையும் இறைவியையும் பற்றிப் பேசுவதற்காகவும் போற்றுவதற்காகவுமே எழுந்தவையாகும். தமிழ்ப் புராணங்களில் பெரிய புராணமே சிறிதளவில் மாற்றங்கொண்டு வாழ்க்கை வரலாறுகளை அடக்கியுள்ளது. அதிலுங்கூட எல்லா அடியார்களும் சிவத்தோடு தான் கலக்கின்றனர்.

ஆண்டாளும் காரைக்காலம்மையாரும் வடநாட்டில் மீராபாயும் மற்றும் மேலை நாட்டில் ஏசுநாதருங்கூட அப்படித்தான் இறைவனடி அடைந்தனர் என்று சொல்லும்போது, பிரமிள் எதை ஸ்தாபிக்க விரும்புகிறார் என்றால் வடநாட்டிலும் இப்படி – தென்னாட்டிலும் இப்படி ஒரே மரபு இங்குள்ள ரிஷிகள் அங்கே போய் ஏற்படுத்திய நியதிகள் – எனவே அறிஞர் அண்ணாவும், காமராஜரும், பசும்பொன் தேவர் போன்றோர் யாவரும் பிராம்மணர் போல் ரிஷிகளின் கோத்திரத்தில் வந்தவர்தாம் என்று ஏற்கெனவே எழுதியது சரிதான் என்கிறார்.



படிப்பகம்

அப்படியெல்லாம் சுற்றி வந்தாலும் மூக்கைத் தொட முடியாது. அவதூறாக் எழுதியதை மறைத்துவிட முடியாது என்பதை பிரமிள் உணரும் காலம் இது.

* * *

கா.சு. பிள்ளையவர்களைப் பற்றியும், ஜீவா பற்றியும் யார் சொல்வது என்ற விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது. திரு. தி.க.சி. பற்றி பிரமிள் அறிந்த ஒரே விஷயம் அவர் பாத்ரூம் போய் வருவார் என்பதுதான். ஜெயகாந்தனிடம் இப்படித்தான் இசைகேடாகப் பேசப்போய் வாங்கிக் கட்டிக்கொண்டதையும் காதல் ஆசிரியர் அரு. ராமநாதன் அவர்களிடம் பிரமிள் எழுதிக்கொடுத்த கதைகள் பற்றியும் பின்னர் கூறுகிறேன்.

* * *

பாதிப்பு தவிர்க்க முடியாதது என்கிறார் பிரமிள். உண்மை. இலக்கியமே பாதிப்புத்தான். இமிட்டேஷன் -காப்பியடித்தல் அவ்வாறு அல்ல. சரிதான். இது இவரது 'ஆயி' புத்தகம் பற்றி முன்றிலில் வந்த குறிப்பிற்கான பதில் என எடுத்துக் கொள்ளலாம்.

DIAMOND LENS கதை ஒரு வைரத்தை மையமாக வைத்து எழுதப்பட்டது. நெற்றிக் கல்லை மையமாகக் கொண்டது ஆயி கதை. தெய்வீகமான அந்த வைரத்தை அடைய தெய்வீகத்தையும் தாண்டிச் செல்ல முயல்கிறான் ஒருவன், முதற் சொன்னதில். பின்னதிலும் அப்படித்தான். சிலையாக நின்ற ஆனிமுலா ஆணின் வீரியத் தன்மை கொண்ட பெண் உருவம். பேராய்ச்சியும் அப்படித்தான். சிலைக்கு முன்னால் கொலை நடக்கிறது. ஆனிமுலா கதையில் வெளியே. தனது நோக்கத்தை அடைய முயற்சிக்கும் இரண்டு கதைகளில் வரும் நபர்களுக்குமே தெரிந்த எல்லாவற்றிற்கும் அப்பால் மறைந்து கிடக்கும் ரகசியம் தெரியாது. இருவருமே அழிகிறார்கள்.

இரண்டு கதைகளுமே இப்படியிருந்தால் அது பாதிப்பா இமிட்டேஷனா, காப்பியா?

அட்லாண்டிக் மன்த்லியில் ஃபிரிட்ஸ் ஜேம்ஸ் ஓபிரியன் எழுதிய சிறுகதை மேற்சொன்ன ஆனிமுலா என்னும் டயமண்ட்

www.padippakam.com

லென்ஸ். பின்னர் அவருடைய சிறுகதைத் தொகுதியிலும் இடம் பெற்றது.

இக்கதையைப் பற்றி ரீடர்ஸ் டைஜஸ்ட் பின்வருமாறு குறிப்பு எழுதியிருக்கிறது.

**This Exceedingly clever tale is told with an artistry and technical skill worthy of high honour in the annals of the American short story.**

இதைப்படித்து விட்டு கீழ்க்கண்ட குறிப்பையும் படியுங்கள் "கதை சொல்லும் உத்தியில் ஓர் ஆதி நிலையும் நவீனத்துவமும் கலக்கின்றன. ருசிகரமற்ற எழுத்து நிறைந்த சூழலில் வித்யாசமானது இக்கதை"

இது லயம் வெளியிட்டாளர் ஆயி புத்தக பின்னட்டையில் தெரிவித்த செய்தி. சுளையோடு தோலையும் சேர்த்து முழுங்கிய பெருமை தமிழுக்கு வந்து விடுமோ என்ற பயம் ஏற்படுகிறது. சிலர் போடுகிற தாளம் கூட ஒரிஜினலாக இருப்பதில்லை. கேள்வியும் அவரே பதிலும் அவரே என்பது உண்மையாக இருக்குமானால் மேற்படி விஷயத்தையும் பிரமிளே எழுதியிருக்கக் கூடும்.

வேறு வகையில் 'ஆயி' கதையில் வரும் விவரங்கள் குறிப்பாக கன்னியா குமரி பகுதி சார்ந்தோருக்கு நகைப்பை ஏற்படுத்தும் - சிலருக்கு கோபமும் ஏற்படலாம்.

"மருத்துவ மலையில் கிழக்கே கன்னியாகுமரி" என்று கூறப்படுகிறது (பக்கம் 15) பொற்றையடிக் கிராம மக்கள் இதைக் கேட்டால் சிரிப்பார்கள். குமரிக்கு தெற்கு, கிழக்கு, மேற்கு எல்லாம் கடல்தான் என்பது சிறுவர்க்கும் தெரியும். குமரியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் பாதையில் உவரி கிராமத்திற்கும் குமரி முனைக்கும் ஏறக்குறைய நடுவில் இருப்பது மருந்து வாழ்மலை என்னும் மருத்துவ மலை. அப்படியென்றால் எது எது என்ன திசையிலுள்ளது என்பது தெரிந்து விடும். யாழ்ப்பாணத்திற்கு கிழக்கே கொழும்பு என்பது போலத்தான் பிரமிளின் டாப்போகிராபி வரையப்பட்டிருக்கிறது.

திருவிதாங்கூர் சமஸ்தானம் என்று இருக்கும் போது கன்யா குமரி மாவட்டம் என்ற பெயரே யாருக்கும் தெரியாது. தெரியாத ஒன்றை தவறாகக் கூட யாரும் சொல்லியிருக்க முடியாது. நூறு



படிப்பகம்

ஆண்டுகளுக்கு முன்பு 'பாக்கிஸ்தான்' என்ற பெயரை யாரும் உச்சரித்திருக்க முடியாது. தன்னுடைய ஓமெத்தாடலஜியால் இவர் சிருஷ்டித்த முகவரிதான் "கன்யாகுமரி மாவட்டம்' திருவிதாங்கூர் சமஸ்தானம்" என்பது. (பக்கம் 3) சம்பாஷணை செய்தவர் தவறாக ஒன்றைச் சொல்லி விட்டார் அதற்கு ஆசிரியர் பொறுப்பல்ல என்றால் குமரி மாவட்டம் ஏற்படுவதற்கு முன்பு மட்டுமே சொல்லப்பட்டிருக்க வேண்டிய ஒரு உரையாடல் பகுதியும் வருகிறது. அந்த லயம் வெளியிட்டாளர் கண்டு பிடிக்கலாம்.

"குமரிப் பிரதேசமும் அதன் மொழியும் முன் எப்போதும் இல்லாதபடி சித்தரிக்கப்பட்டுள்ளன" என்கிறது பின்னட்டை.

"அவளுடைய புருசனோடை" என்பதும் "பார்த்து விட்டு வந்திருக்கிறான்கள்" என்பதும் (பக்கம் 13, 19) ஈழத்தமிழ் அல்லவா? குமரி மாவட்டம் முழுவதும் பேசப் படும் தமிழ் அல்ல நாஞ்சில் வட்டார மொழி. கரிசல் தமிழ் போலவே அது ஒரு மாவட்டத்தின் குறிப்பிட்ட பிரதேசத்திற்கு மட்டுமே உரித்தானது என்பது பின்பாட்டுக்காரருக்குத் தெரிந்திருக்க வேண்டும். பொற்றையடிக் கிராமமும் மருத்துவ மலையும் நாஞ்சில் பகுதியைச் சார்ந்தவை.

நாஞ்சில் நாட்டுப் பகுதியில் புத்திசாலித்தனமும் தந்திரமும் கொண்ட சிறுவர்களை பெரியவர்கள் "லேய் செம்புலிங்கம்" என்று செல்லமாக இப்போதும் அழைப்பதுண்டு. இந்த சம்புலிங்க நாடார் ஆங்கில அரசால் சுட்டுக் கொல்லப்பட்டார். விடலிவிளை என்ற ஊரில் பிறந்த சம்புலிங்கம் உடையவர்களிடமிருந்து பொருளைக் கொள்ளையடித்து ஏழைகளுக்குத் தந்தவர். முன்பின் தெரியாத ஒரு கிழவியின் பேத்தி திருமணத்தை-ஒரு தங்க அட்டிகையால் தடைபட்ட திருமணத்தை- தங்கைக்கு அண்ணனின் சீர்வரிசை என்று அதை அளித்து நடத்தி வைத்தவர் என்று வயதானவர்கள் அங்கே சொல்வதை நானே கேட்டிருக்கிறேன். காசி, துரைவாப்பா என்பவர்களோடு போலீசிடமிருந்து தப்பி இலங்கையில் சிறிது காலம் இருந்து திரும்பி வந்து துப்பாக்கிச் சூட்டில் மாண்டவர். 1957இல் காலமான துரைவாப்பா என்ற செம்புலிங்கத்தின் நண்பர் மூலமாக பல சங்கதிகள் தெரிகின்றன. புரட்சி வீரர் மூவர் என்னும் இவர்களின் வரலாறு நாகர்கோவில் இந்துக் கல்லூரியில் பாடமாகவே வைக்கப்பட்டுள்ளது.

www.padippakam.com

இந்த சம்புலிங்கத்தைத்தான் பிரமிள் "திருவிதாங்கூர் சமஸ்தான காலத்திலே பிராமனரிடம் பணம் வாங்கிக் கொண்டு பிள்ளை, முதலி, தேவர்களையெல்லாம் கிலி எடுக்க வைத்தவன், படு கள்ளன்" என்று சுப்புறுமணி நாடார் மூலமாக அடையாளப் படுத்துகிறார். (பக்கம் 11)

மிகவும் குறைவான எண்ணிக்கையைக் கொண்ட பிராமணரைத் தவிர நாஞ்சில் நாட்டில் யாரும் இதுபோல சொல்லியிருக்க முடியாது. சுப்புறுமணி நாடார் சொல்கிறாராம். ராபின் ஹுட்டை கொள்ளைக்காரன் என்று பாதிரிமார் மட்டுமே கேவலப்படுத்த முடியும். வாஞ்சிநாதன் பயன்படுத்திய துப்பாக்கி கொள்ளையடிக்கப்பட்டதா இல்லையா? நாடார் சமூகத்தினர் இது பற்றி எழுதி ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

திருவிதாங்கூர் சமஸ்தான காலத்திலே என்று சம்பாஷணை ஆரம்பிப்பதால் கதை குமரி மாவட்டம் ஏற்பட்ட பிறகுதான் என்று தெளிவாகிறது. இது லயம் வெளியிட்டாருக்கு ஒரு க்ளு, திரும்பவும் அந்தப் பகுதிகளைப் படித்து அதற்கு மாறுபாடாக இருக்கும் செய்தியை கண்டுபிடிக்கலாம்.

பிள்ளை-முதலி-தேவர்" என்று சொல்லும் பிரமிளுக்கு 'முதலி' என்றால் நாஞ்சில் நாட்டைப் பொறுத்தவரை யார் என்றே தெரியாது. ஜாதிச் சண்டைக்காரர் என்று முன்றிலை அழைக்கும் இந்த யோக்கியருக்கு முன்றிலார் ஐம்பதுகளின் ஆரம்பத்திலேயே ஆரிய-திராவிட விஷயங்களைப் பற்றி, கலை மன்றம், பொன்னி ஆகிய பத்திரிகைகளில் எழுத ஆரம்பித்தாயிற்று என்று தெரிய நியாயமில்லை. ஐம்பத்து நாலில் எழுதி 'புதுமை' பத்திரிகையில் வெளிவந்த கதையே, தொண்ணூற்று மூன்றில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு நமஸ்தே பத்திரிகையில் வெளிவந்தது. முன்றிலாரின் முதல் கதை பிரசண்ட விகடனில் வெளிவந்த போதும் (1952) சரி, சென்ற மாதம் வெளிவந்த கதையும் சரி, ஒருவகை சாதிச் சண்டையை கொண்டுதான் நிற்கும். இரண்டாயிரம் வருடமாக நடந்து வரும் சண்டை. அது தமிழ்ச் சாதியின் சண்டை. இரண்டாயிரம் வருடமாக சண்டை போடுவதிலேயே எவ்வளவு தூரம் ஜெயிப்போம் என்பது தெரிகிறது என்று நக்கல் பண்ணினார்



படிப்பகம்

வையாபுரி பிள்ளை. அதைத்தான் பிரமிளும் பண்ணிப் பார்க்கிறார். சகோதரி இவரை சிங்களவராக்க முயற்சி செய்தது போல இவர் தமிழருக்கெல்லாம் யக்ஞோபியம் போட பிரயத்தனம் செய்கிறார். அது நடக்க முடியாது என்பதுதான் இரண்டாயிர வருட சண்டையின் வெற்றி. தமிழரின் கடவுளை ஆரிய மயமாக்கிய போதும், பூசனையை வைதிகமயமாக்கிய போதும் அடங்கியிருந்த தமிழ்ச்சாதி "தமிழனே பிரம்மனின் மானச புத்திரரின் சந்ததிதான்" என்னும் நீச வார்த்தைகளை கேட்டு, புதிதான சண்டையை துவக்கியுள்ளது. இது சாதிச் சண்டைதான். தமிழச்சாதியின் சண்டை. இதன் வெற்றியில் யாருக்கும் அழிவு இல்லை. வரலாற்று உண்மை மட்டும் கொடி கட்டிப் பறக்கும்.

இது பஃறுளி ஆற்றுத் தண்ணீர் குடித்த சீவன் தம்பி; ஆனா ஆவன்னா எழுதப் படிக்கத் தெரிவதற்கு முன்பே திருமந்திரமும் அதன் மூலம் வைதிக எதிர்ப்பிற்கும் வித்திட்டாயிற்று. பதினைந்து வயதுக்குள்ளேயே கலைமகளில் கடவுளும் கந்தசாமி பிள்ளையும் படித்து இன்னமும் படித்துக் கொண்டிருக்கிறவன். புதுமைப்பித்தனை எல்லாரும் புகழ்கிறார் களே-கொஞ்சம் மவுனி பக்கம் போய் வித்யாசத்தைக் காட்டலாம் என்று ஆரம்பித்து, பலர் மவுனி புகழ்பாட ஆரம்பித்ததும் அவர் ஒரு தமிழ்த் துரோகி-எச்சில் இலையை எடுத்துப் போடச் சொன்னவர் என்று ஓடி பு.பி. பக்கம் ஒதுங்கியவன் அல்ல நான். முன்றிலாரின் சாதி மலையிலிருந்து ஆரம்பித்து ஏற்பட்ட எல்லா சாதிகளும்தான். அந்த சாதிக்குரிய வேதம் வியாசனால் தொகுப்பப்பட்டதல்ல. எல்லா இனங்களிலும் நல்லதும் நல்லவரும் உண்டு என நம்புகிற சாதி. 'வெளி' எனப்படும் சித்தர் தத்துவத்தில் மிலேச்சத்தனம் கொண்டோர் யாருமில்லை என்றிருக்கும் சாதி. இந்தத் தன்மை இல்லாதாரிடம் சண்டை போடத்தான் வேண்டும்.

பொற்றையடி கிராமத்தில் சந்திரனை 'சந்திரிகை' என்றுதான் பாமரனும் சொல்லுவானாம்-சாதாரண சம்பாஷணையிலும் அப்படித்தான் வருமாம் (பக்கம்15) மிகவும் மகிழ்ச்சி-அதை ஒரு 'ஸ்பெஷலிஸ்ட்' நிலையிலிருந்து கொண்டு கூறுகிறார் "தை மாதத்தில் சந்திரிகை பூரணம் பெறுவது மகரத்திற்கு எதிர் முகமான கடகத்தில்" என்று. வாசகர்கள் புல்லரித்து போயிருப்பார்கள். ஆயில்ய நட்சத்ரம் நாலாவது

www.padippakam.com

பாதம் கடகத்தில் தான் இருக்கிறது. தை மாதம் சந்திரன் அந்த நடசத்திரத்தில் அதாவது மகரத்திற்கு எதிர் முகத்தில் வரும்போது பூரணம் ஏற்படுமா? எல்லா மாதங்களிலும் எதிர் முகத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்தில் சந்திரன் பூரணம் பெறும் என்பது வானசாத்திரம். இந்த விஷயத்தில் ஆட்சி உச்சம் என்று பெயர்களை பயன்படுத்துவது அதிகபிரசங்கித்தனம். எந்த சோதிட சாத்திரத்திலும் அப்படிக் கிடையாது. எல்லா மாதத்திலும் சந்திரன் பூரணம் பெறுகிறது. கார்த்திகை - தை மாதங்களில் பூரணம் பெறுவதே கார்த்திகை தீபமும், தைப்பூசத் திருநாளுமாகும். கார்த்திகை நட்சத்திரத்திற்கு சங்க காலப் பெயர் அழல் குட்டம். திருவண்ணாமலை தீபத்திற்குத் தகுந்த பெயர். இந்த கார்த்திகை தீபத்தைத் தான் வட இந்தியர் தீபாவளியாகக் கொண்டாடுகிறார்கள். தமிழில் உள்ள அறுபது ஆண்டுகளின் பெயர்கள் வடமொழியில் இருந்தாலும், இந்த அறுபது ஆண்டுக் கணக்கு வட இந்தியாவில் இல்லை. தீபாவளியை நாம் தனியாகக் கொண்டாடியதே கிடையாது. இந்த விஷயங்கள் பற்றித் தெரியாமல் என்னமோ தீபாவளிப் பட்டாசு நோய்க் கிருமிகளை அழிக்கும் திருக்கார்த்திகைப் பட்டாசு நோயை வளர்க்கும் என்றெல்லாம் பிதற்றக் கூடாது. ஊர்களில் கார்த்திகை நாளன்று சொக்கப்பனைக் கொளுத்துவதும், ஊர் பூராவும் சிறுவர்கள் வாணத்தைக்கொளுத்திச் சுற்றுவதும்தான் நோய்க் கிருமிகளை அழிக்கும் அந்நாளைய வழி. சுற்றுகிற வாணத்தில் கரியும் உப்பும் கலந்திருப்பது அந்நாள் தொட்டு வருகிற வழக்கம். எல்லாவற்றிற்கும் மேலாக ஒன்றைச் சொல்லலாம். நரகாசுரன் கதை என்று எதுவும் எந்தப் புராணத்திலும் கிடையாது. இதை எந்த பௌராணிகரிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இதைப் பற்றி பிரமிள் கதைப்பதற்கு எதுவும் இல்லை. என்ன தான் பரமார்த்த குருவின் சீடர்களாக இருந்தாலும், இவ்வளவு தூரம் அவர்களை குறைத்து மதிப்பிடக் கூடாது.

கதைகளில் விவரங்கள் சம்பாஷணையாக வந்தாலும், விஷயத்திற்கு முக்கியத்துவம் தருகிற விருப்பம் பிரமிளுக்கு இருக்கிறது. ஆனால் ஆசிரியருக்குக் தெரிந்த அளவு தானே அவரது கதாபத்திரங்களும் பேசமுடியும்.

அமெரிக்க ஆசிரியர் ஓபிரியன் அமெசான் காடுகளி லெல்லாம் சுற்றி உக்ரம மிகுந்த பெண் (தெய்வ) சிலைகளை



படிப்பகம்

www.padippakam.com

அங்கே பார்த்தாகத் தெரிகிறது. அதையே அவர் ஆணிமுலாவாக கற்பித்திருக்கவேண்டும்.

நாஞ்சில் நாட்டுப் பகுதிகளிலும் இம்மாதிரி சிலைகள் இருக்கின்றன. நடுக்காட்டு இயக்கி அம்மன் என்ற கோவில் உண்டு. மற்றும் அவ்வையாரம்மன் கோவிலும் உண்டு. ஆரல்வாய் மொழி பக்கத்தில் முப்பந்தல் என்ற இடத்தில் ஒரு கோவிலும் இருக்கிறது. சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மூவரும் வந்திருந்து அங்கவை சங்கவை திருமண நிகழ்ச்சியை பார்வை யிட்டதாகச் சொல்லும் இடம் இந்த முப்பந்தல்.

நாஞ்சில் பகுதியில் இவற்றை எல்லாம் கண்டு ஆழ்ந்திருந்தால், ஆயி கதை வேறு மாதிரியாகவோ அல்லது வேறு கதையொன்றோ வந்திருக்கலாம். தோசையும் ரசவடையும் நாகர் கோவில் நண்பரோடு சாப்பிட்டு, அந்தக் கையோடு நண்பரையும் திட்டிவிடத்தான் சிலருக்கு சில பயன்படும்.

நம்முடைய சண்முக சுந்தரம் தாமஸ் ஹார்டியாலும் தி. ஜானகிராமன் தாமஸ் வுல்பாலும் பாதிக்கப்பட்டவர்கள் என்று க.நா.சு. ஒரு தடவை எழுதியிருந்தார்.

பிரமிளின் ஆயி அப்படி எல்லாம் பாதிக்கப்பட்ட நிலையில் எழுதப்பட்டதல்ல என்று சொல்ல முடியும்.

விவர உண்மைகள், களன், இவை எல்லாவற்றையும் தாண்டி பிரமிளின் ஆயிகதையில் துடித்துக் கொண்டிருப்பது ஓபிரியன் கதையின் உயிர்நாடி, அது ஓர் இலக்கியத்திருட்டு என்பதை வாசகர்கள், ஓபிரியன் கதையை அமெரிக்க நூல் நிலையத்தில் தேடிப் படித்தால் புரிந்து கொள்வார்கள். ரீடர்ஸ் டைஜஸ்ட் இதழில் வந்த குறிப்பின் ஜெராக் பிரதியை வேண்டுமாயின், எழுதினால் அனுப்பித் தரமுடியும். ஒரு சிலருக்கு மட்டுமே அனுப்ப இயலும். நான் பென்ஷனில் சாப்பிட்டு வாழ்கிறவன்.

மேலும் லயங்கண்டு. இந்த லயம் என்ற பத்திரிகை தமிழகத்தில் முன்றில் புத்தக நிலையத்தில் மட்டுமே கிடைப்பதாக நண்பர்கள் கூறுகிறார்கள். (5 பிரதிகள்) பழைய லயம் இதழ் களும் கிடைக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

# மூன்றில் செய்திகள்

- பிரபஞ்சனுக்கு சாகித்ய அகாதமி பரிசு கிடைத்தது சமீபத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியான விஷயம். அவருடைய மீன், விழுது, ஆகிய கதைகளை பலமுறை படித்து இன்புற்றிருக்கிறேன். பிரபஞ்சன் இன்னும் முழு அளவில் இலக்கியத்தில் ஈடுபட வேண்டுமென்ற ஆசையையும் மூன்றில் தெரிவித்துக் கொள்கிறது.

- சாகித்ய அகாதமி கவிதை கதை அரங்கங்களை சென்னையில் நடத்தி வருவது நல்லவிஷயம். சமீபத்தில் நடந்த கவிதை வாசிப்பில் ஆனந்த், ரவி சுப்பிரமணியன், ராசகோபால், சுகுமாரன் ஆகியோர் பங்கு பெற்றனர். குரல் வளமும் அவர்களுக்கு இருந்தது ஒரு சிறப்பு. "பிச்சை எடுக்கும் யானை" என்ற ரவி சுப்ரமண்யத்தின் கவிதை வரி ஒரு மௌனத்தை ஏற்படுத்திற்று.

- கலைக் களஞ்சியமாக இந்திய / உலக சரித்திரத்தை வால்யூம்களாக வெளியிட்டிருக்கிற திரு. ப. சிவனடி அவர்களின் சாதனை வருங்காலத்தில் பெரிதும் போற்றப்படும். இது பற்றிய கட்டுரை ஒன்று மூன்றிலில் வெளிவரும்.

படிப்பகம்

www.padippakam.com

மா. அரங்கநாதனின்

# காடன் மலை

(சிறு கதைகள்)

விவரங்களுக்கு :

தாமரைச் செல்வி பதிப்பகம்,
31/48, ராணி அண்ணா நகர்,
சென்னை – 78.

படிப்பகம்